**கவனிக்க**.- 26.07.2018 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2083 - 2018 අගෝස්තු මස 03 වැනි සිකුරාදා - 2018.08.03

*2083 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1334 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 1339 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1340 |
| விஜலக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1345 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்) சட்டமூலம் 2018, யூலை மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, ஒகத்து மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஒகத்து மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டு மென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1333-B 81436-403 (2018/08)

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 670*

MOD/DEF/02/01/ARF/RET/1734.

## இலங்கைத் தரைப்படை - நிரந்தரப்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்

கீழ்க்காணும் பெயருடைய உத்தியோகத்தர் 2018, செத்தெம்பர் 13 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கப்டன் (உபகரண நிருவாகம்) செனரத் ஆரச்சிகே தொன் ஆனன்த ஜயலால் சேனாரத்ன, யூஎஸ்பீ, இஇமப (உ/67559)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூன் 25.

8-165

---

*2018 இன் இல. 671*

MOD/DEF/03/02/8/7.

## இலங்கைக் கடற்படை – நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உறுதிப்படுத்துதல்

*2018, மே மாதம் 01 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கமாண்டர் (சஞ்) தரத்திற்கு :*

லெப்டினனட் [தற்காலிக லெப்டினனட் கமாண்டர் (சஞ்)] கருணாமுனி சங்க மதுசான் சில்வா, என்ஆர்எக்ஸ் 2358, இகப

*2018, மே மாதம் 29 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கமாண்டர் (ச) தரத்திற்கு :*

லெப்டினனட் (ச) [தற்காலிக லெப்டினனட் கமாண்டர் (ச)] சபுமல் அநுருத்த குமாரநாயக, என்ஆர்எஸ் 2386, இகப

*2018, மே மாதம் 31 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கமாண்டர் (ச) தரத்திற்கு :*

லெப்டினனட் (ச) [தற்காலிக லெப்டினனட் கமாண்டர் (ச)] மிஹிதுகுலசூரிய ரங்ஜு குரேரா, என்ஆர்எஸ் 2397, இகப

*2018, யூன் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து லெப்டினனட் கமாண்டர் (ஏஎஸ்டப்) தரத்திற்கு :*

லெப்டினனட் [தற்காலிக லெப்டினனட் கமாண்டர் (ஏஎஸ்டப்)] சமீர லக் சிறி எதிரிவீர, என்ஆர்எக்ஸ் 2372, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-60

---

*2018 இன் இல. 672*

MOD/DEF/03/02/RES/306

## இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையில் இருந்து கேட்டு விலகுதல்

2018, யூலை மாதம் 20 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படை பிரிவில் கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி அதிகாரவாணையில் கேட்டு விலகுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கமாண்டர் விக்ரமகே நவீன் சிறி விக்ரமகே, என்ஆர்எக்ஸ் 2571 இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-64

*2018 இன் இல. 673*

MOD/DEF/03/02/RET/341

**இலங்கைக் கடற்படை – நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி 2018, ஓகத்து மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படை பிரிவில் ஓய்வு பெறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கமாண்டர் (நாசெ) கருணாரத்ன ராஜபக்ச முதியன்சேலாகே பாலித கபில பண்டார, என்ஆர்பீ 1277, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூன் 21.

8-62

---

*2018 இன் இல. 674*

MOD/DEF/03/02/RET/347.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல் மற்றும் நிரந்தரக்
கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி 2018, செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படை பிரிவில் ஓய்வு பெறுதல் மற்றும் அந்த நாளில் இருந்து நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கமாண்டர் (ச) ரத்நாயக முதியன்சேலாகே நுவன் பிரசாத் ரத்நாயக, என்ஆர்எஸ் 1305, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-67

---

*2018 இன் இல. 675*

MOD/DEF/03/02/RET/348.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல் மற்றும் நிரந்தரக்
கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி 2018, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படைப் பிரிவில் இருந்து ஓய்வு பெறுதல் மற்றும் அந்த நாளில் இருந்து நிரந்தரக் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கமாண்டர் (நாசெ) விஜேரத்னகே காமினி முணசிங்ஹ, என்ஆர்பீ 1059 இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-66

---

*2018 இன் இல. 676*

MOD/DEF/03/02/RET/346.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி 2018, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படை பிரிவில் இருந்து ஓய்வு பெறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினனட் கமாண்டர் (ச) சேனாதிரன்னஹெலாகே அமில கிரிசாந்த குணதிலக, என்ஆர்எஸ் 1410 இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-65

*2018 இன் இல. 677*

MOD/DEF/03/02/RES/305.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்ட அதிகாரவாணையில் இருந்துகேட்டு விலகுதல்

2018, யூலை மாதம் 25 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் இலங்கைக் கடற்படை நிரந்தரக் கடற்படைப் பிரிவில் கீழ்க் காணப்படும் பெயருடைய அதிகாரி அதிகாரவாணையில் இருந்து கேட்டு விலகுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

வைத்தியர் உப லெப்டினன்ட் சிவலிங்கம் சிவறுபன், என்ஆர்எம் 3745, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-68

---

*2018 இன் இல. 678*

MOD/DEF/03/02/RET/349

**இலங்கைக் கடற்படை – தொண்டர் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப் பட்ட ஓய்வு பெறுதல் மற்றும் தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

கீழ்க் காணப்படும் பெயருடைய சிரேஷ்ட அதிகாரி 2018, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதியிலிருந்து இருந்து இலங்கைக் கடற்படை தொண்டர் கடற்படைப் பிரிவில் இருந்து ஓய்வு பெறுதல் மற்றும் அந்த நாளில் இருந்து தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

கெப்டன் (தொண்டர்) தொடன்கொட ஆரச்சிகே லயனல் குணரத்ன, இதொகப – என்வீஎக்ஸ் 5164

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 06.

8-61

*2018 இன் இல. 679*

MOD/DEF/03/02/EX.

**இலங்கைக் கடற்படை – தொண்டர் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

2018, யூலை மாதம் 12 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வகையில் கீழ்க் காணப்படும் பெயர் உள்ள அதிகாரி இலங்கைக் கடற்படை தொண்டர் கடற்படைப் பிரிவில் இருந்து தொண்டர் கடற்படை உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் கமாண்டர் (தொண்டர்) ரதலியகொட கண்கானமலாகே சுனில் ரதலியகொட, என்வீஎக்ஸ் 5415, இதொகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூன் 21.

8-63

---

*2018 இன் இல. 680*

MOD/DEF/10/03/COM/RAF

**இலங்கை வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் ஆணைப்படி அதிகாரவாணைக்கு நியமனம் செய்தல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் அவர்களது பெயர்களுக்கு முன் குறிப்பிட்ட திகதி முதல் செயல்வலுப்பெறும் வண்ணம் அதியுத்தமராம் சனாதிபதியின் கட்டளையால் அவர்களது பெயர்களுக்கு முன் குறிப்பிடப்பட்டுள்ள பதவியுடன் அத் திகதியிலேயே கிளைகளில் சேவைக்கு அமர்த்தப்படுவர்:-

பிளைட் லெப்டினன்ட் முஹன்திரம் ராலலாகே ஹர்ஷா டொரிக் குமாரிஹாமி (03785) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் தினேஷ் ரங்க யாபா (03786) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் லொகு கமகே லக்ஷிகா குணரத்ன (03787) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் வன்னி ஆரச்சிகே குவனி சஷிகா மதுவந்தி (03788) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் அலகியவன்ன சமித் துலஞ்ஜன அபேசிங்ஹ (03789) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் விக்ரமநாயக கருனாரத்ன சதுர மதுஷான் விக்ரமநாயக (03790) மின். பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் விக்ரம ஆரச்சில்லாய அநுருத்த விக்ரம ஆரச்சி (03791) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் தொலேகெதர பசிந்து ரங்கன ஜயசிங்ஹ (03792) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் கம ராலளாகே சசித் திலின ஆனந்த (03793) மின். பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் உடுஹாவர குறுப்பு முதியன்சேலாகே துமிந்த சதுரங்க (03794) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் தன்தசிங்ஹ படபெதிகே சமிந்த குமார பத்மசிறி (03795) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் இலேபெரும ஆரச்சிகே சதுரங்க லக்ஷான் இலேபெரும (03796) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் புபுது சந்தருவன் ரத்னசிறி (03797) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் எதிரிசூரிய ஆரச்சிகே லக்மினி நிசாந்தி விஜயரத்ன (03798) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் காரியவசம் பதிரனகே உதார மதுஷங்க (03799) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் களுகல விதானகே குசான் ஔசித்ய ஜயதிலக (03800) தொழி. பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் விக்ரமசேகர லியனாரச்சிகே டொன் கஜிந்திர கல்ஹார விக்ரமசேகர (03801) தொழி. பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் பேலவ கல்அங்கே கெதர சின்தக மிலான் சமரநாயக (03802) மின். பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் அன்ட்ரனி ட்ரக்ஷி செலர் (03803) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் குணசேகர முஹன்திரம்கே சரித் கேஷிக (03804) தொழி. பொறி - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் தவுன்தகே சாமர சம்பத் (03805) நிர் - 25.07.2017

பிளைட் லெப்டினன்ட் திஸாநாயக முதியன்சேலாகே கசுன் மதுசங்க பண்டார திஸாநாயக (03806) மின். பொறி - 25.07.2017

பிளைங் ஒபிசர் காவின்த பிரியமால் பண்டார மாஸ்வெலகெதர (03807) தொழி. பொறி - 25.07.2017

பிளைங் ஒபிசர் தேமினிதுரகே அமில பிரசாத் ஆரியரத்ன (03808) தொழி. பொறி - 25.07.2017

பிளைங் ஒபிசர் ஹஷான் புத்திக ஹேவாகம (03809) நிர் - 25.07.2017

பிளைங் ஒபிசர் பனாதரயலாகே அசங்க புத்திக குமார ஜயரத்ன (03810) நிர். பேன்ட் - 25.07.2017

பிளைங் ஒபிசர் ஸொஹான் பிரமுதித விஜேதுங்க (03811) மின். பொறி - 25.07.2017

பிளைங் ஒபிசர் களுதுர பிரமோத் கசுன் அநுராத டி தப்றூ (03812) மின். பொறி - 25.07.2017

பிளைங் ஒபிசர் குலரத்ன ஆரச்சிகே கசுன் நயனஜித் குலரத்ன (03813) மின். பொறி - 25.07.2017

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 17.

8-166

---

2018 இன் இல. 681

**தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கிகரிக்கப்பட்ட பதவி நிலைகளை நிரந்தரமாக்குதல்

*2013, ஒற்றோபர் 01 ஆந் திகதியிலிருந்து கர்ணல் ஆக:*

அ/3061 தற்காலிக கர்ணல் டீஎம்யூ திசாநாயக
அ/3063 தற்காலிக கர்ணல் என்கே வக்கும்புர
அ/3077 தற்காலிக கர்ணல் எச்டீ தெவ்புர
அ/3047 தற்காலிக கர்ணல் எம்எம்யூ முணசிங்க
அ/3078 தற்காலிக கர்ணல் பீஏச் பிரனாந்து
அ/3121 தற்காலிக கர்ணல் எஸ்எஸ்ஜீடீ சில்வா
அ/3131 தற்காலிக கர்ணல் எம்எஸ் சாந்த
அ/3072 தற்காலிக கர்ணல் எச்ஏவைஎஸ் ஹெட்டிஆரச்சி (பெ)
அ/3141 தற்காலிக கர்ணல் பீஎஸ் செனவிரத்ன

2014, ஓகத்து 28 ஆந் திகதியிலிருந்து கர்ணல் ஆக :

அ/3222 தற்காலிக கர்ணல் பீகேடீசீ அல்விஸ்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 13.

8-164

*2018 இன் இல. 682*

### தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணி

பின்வரும் பயிலுனர் அதிகாரிகளை கீழே குறிப்பிடுகின்ற திகதியிலிருந்து அவர்களுடைய சிரேஷ்டத்துவத்தின் அடிப் படையில் தேசிய மாணவச் சிப்பாய்கள் படையணியின் இரண்டாம் நிலை லெப்டினன்ட் ஆக அதிகாரவாணைக்கு நியமனம் செய்வதற்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது:-

*2013, ஓகத்து மாதம் 31 ஆந் திகதியிலிருந்து இரண்டாம் லெப்டினன்ட் ஆக :*

1. சமரஜீவ கமகே சியாமா மங்களிகா குணரத்ன (பெ)

*2016, ஓகத்து மாதம் 28 ஆந் திகதியிலிருந்து இரண்டாம் லெப்டினன்ட் ஆக :*

1. குணலிங்கம் நிஷாந்தன்
2. கோனாரசிங்க முதியன்சேலாகே வசந்த பண்டார
3. ரம்படியலாகே நிபுன குசலான் மனோரத்ன

*2017, செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதியிலிருந்து இரண்டாம் லெப்டினன்ட் ஆக :*

1. பமுனுசிங்க ஆரச்சிகே கயான் ரங்கன
2. ஜமால்தீன் பஸ்மீர்
3. நெயினா முஹம்மது முஹம்மது சாலிஹ்
4. வின்சன்ட் ஜோசப் டெனியல் பிரனாந்து
5. கடுவெதராலலாகே பெதும் தினேஷ் குமார
6. பிரியன்காரலாகே அனில் குமார பிரனாந்து
7. ஹொதமுனி ஆரச்சில்லாகே ஜானக தனன்ஜய பண்டார
8. ஜவரன்கே தேஷாந்தி லக்மினி குமாரி ஜயதிலக (பெ)
9. சீர்பாதம் சிவயோகராஜன்
10. மெல்வின் பிரியந்த புல்னர்
11. அதபத்துகம குமார கோனார முதியன்சேலாகே தனுஷ்க ருவான் குணதிலக
12. உடகெதர அப்புஹாமிலாகே ரஜித் ரன்திக உடகெதர
13. ஹொரகொட கங்கானமளாகே லயான் சசிந்தக ஹொரகொட
14. ரன்தெனிய ஆரச்சிகே சதுர ஹேமால் ரன்தெனிய
15. பெதன்கஹவத்த பதிறகே சுகத் பிரியந்த
16. எதிரிசிங்க ஆரச்சிலாகே தினேஷ் ரியன்ஷி எதிரிசிங்க
17. ரணசிங்க ஆரச்சிகே சசங்க லலித வினோத்
18. பெலன்வத்தகே தமித் ரங்மல் விஸ்வநாத் பெரேரா
19. கம்லக்சகே தேவிகா மிஹிராணி செனவிரத்ன (பெ)
20. சமரஹேவா சமித் மதுஷங்க தனசிரி
21. பிடிகள கங்கானம்கே நுவன் சம்பத் குமார
22. வீரசேகர முதியன்சேலாகே ரவீந்திர
23. திசாநாயககே அமாலி சந்தறேகா (பெ)
24. சமிந்த ஜானக ரணசிங்க
25. ஹேனக ரால்லாகே சாமிந்த செனெவிரத்ன
26. திசாநாயக ஆரச்சிலாகே அசிர புத்திக திசாநாயக
27. காளிங்க சுமித் குமார சில்வா
28. பியசேனகே கீர்த்தி சம்பத் பியசேன
29. முல்கிரிகல படல்கே அமில தேஷான் ஜயநெத்
30. இமானுவேல் மெதிவ்ஸ் டியோனி
31. நம்பி களு ஆரச்சிகே தொன் ஷம்மி ரவீந்திர குணசேகர
32. வஜிர பிரியங்கர பம்பரபொடுவ
33. எள்ளியத்தே கெதர நிரோஷா குமுதினி மதுவந்தி (பெ)
34. செயிண்ட் கெனெத் ஜெரோம் ஜோய் மிச்செல் ரோச்
35. இதிரிவிக்ரம படபென்திகே ருவான் மதுஷங்க இதிரிவிக்ரம
36. சுந்தரராஜா ஸ்ரன்லி
37. அம்பல கந்தே இஷாரா தில்ஹாணி ஜயரத்ன (பெ)
38. தனபால முதியன்சேலாகே மஹேஷ் மதுஷங்க பண்டார கபுவத்த
39. அன்கடகே சுனந்த சமத் குமார
40. சுந்தரராஜா ஸ்ராலின்
41. வன்னி ஆரச்சிலாகே சுகத் சந்ரசிரி
42. ரணசிங்க ஆரச்சிலாகே இந்திக லலித் ரணசிங்க
43. கடவத்பேடிகே சுரேஷ் வசந்தகுமார
44. கெடவலகே நிமல் ராஜபக்ஸ
45. ஹெட்டிகே சிசிர குமார ஜயதிலக
46. கச்சுமுகைதீன் முகம்மது இர்பான்
47. உடபாகே விதாரமளாகே பிரதீப் சந்தன விஜேதுங்க
48. பசனி சசங்கி சங்வரி விஜேநாயக (பெ)
49. இரத்தினம் ஜெயமதன்
50. எலபாத ராஜபக்ஸ சிறிவர்தன ஹேவா புவக்தண்டாவகே சுமுது தரங்க
51. விஜேகோன் முதியன்சேலாகே ருவன் குமார விஜேகோன்
52. கிருஷ்ணமூர்த்தி கோகுலராசா
53. கொடே கண்கானன்கே நிலந்தி சந்திமா (பெ)
54. கொஸ்வத்தே கெதர துஷந்த ஹர்மேந்திர
55. வனசிங்க முதியன்சேலாகே தம்மிக சுரஞ்ச
56. பிரசாந்த ரணதுங்க
57. சிவஞானம் சாருஸன்
58. இந்திகா பிரியதர்ஷனி குமாரி வீரசிங்க (பெ)
59. குருவே விதானேலாகே பிரதீப் தம்ஸ்ரீ ஜயதிலக
60. ஹேரத் முதியன்சேலாகே ரோஹன சுசந்த பண்டார
61. வெளிவத்தகே சமிந்த ஜீவந்த
62. சின்னராசா குகன்
63. தர்மலிங்கம் வினோசாந்த்
64. ரஞ்சன் ஜேசுதன்
65. ஹேவா வல்கமகே தோன இந்துமினி நிலங்கா தர்மதாச (பெ)
66. கொஸ்வத்தே கெதர விபுல சுதர்ஷன கருணாதிலக
67. தேவமித்தகே லயனல் ஜயதிஸ்ஸ
68. நிஷ்ஷங்க முதியன்சேலாகே மஹிந்த பிரதீப் நிஷ்ஷங்க
69. யாபா முதியன்சேலாகே அனுஷா தில்லாணி (பெ)
70. முகம்மது ராசிக் துவான் ஆர்பின்
71. கங்ஹேவாயலாகே தம்மிக நந்தன கங்ஹேவா
72. வனசிங்க முதியன்சேலாகே மஹிந்த பிரேமலால் வனசிங்க
73. எல்லாவல இமியஹாமில்லாகே நிருபா ஸ்ரீயா காந்தி ஜயவர்தன (பெ)

74. திசாநாயக முதியன்சேலாகே மாலனி குமாரி திசாநாயக (பெ)
75. பனாபிடி கங்கானமலாகே தொன் பிரபோதா ரசாஞ்சலி (பெ)
76. சிவபாதம் சுரேஸ்குமார்
77. ஜயசுந்தர முதியன்சேலாகே லலித்சிறி பிரேமரத்ன
78. கிருஷ்ணமூர்த்தி சந்திரகுமார்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2018, யூலை 09.

8-163

---

# அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2018 இன் இல. 683

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

சட்டத்தரணி (திரு) பி. எஸ். டபிள்யூ. குணவர்தன அவர்கள், 2018, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை ஒப்பந்த அடிப்படையில் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப் பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

8 - 196/1

---

2018 இன் இல. 684

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. டபிள்யூ. ஏ. சூலாநந்த பெரேரா அவர்கள், 2018, மாச்சு மாதம் 21 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கருத்திட்ட முகாமைத்துவ, இளைஞர் அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

8 - 196/2

---

2018 இன் இல. 685

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது

இலங்கை கமத்தொழில் சேவையின் 1 ஆம் தரத்தைச் சேர்ந்த கலாநிதி (திரு) டபிளியு. எம். டபிள்யு. வீரக்கோன் அவர்கள், 2018, மாச்சு மாதம் 29 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை கமத்தொழில் பணிபபாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

8 - 196/3

*2018 இன் இல. 686*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி ஆர். விஜயலக்ஷ்மி அவர்கள், 2018, மே மாதம் 14 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் செயலாளராக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

8 - 196/4

*2018 இன் இல. 687*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இளைப்பாறிய உத்தியோகத்தரான இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. ஜே. தடல்லகே அவர்கள், 2018, மே மாதம் 17 ஆந் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக ஒருவருட (01) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

8 - 196/5

# அரசாங்க அறிவித்தல்கள்

## ராகம லங்கா அப சுவாமிதூகே தேசிய பசிலிகா தேவாலய வருடாந்த உற்சவம் - 2018

கம்பஹா மாவட்டம்

ராகம, தேவத்த, லங்கா அப சுவாமிதூகே தேசிய பசிலிகா தேவாலய வருடாந்த உற்சவம் (நோயாளர்களின் உற்சவம்) 2018, ஓகத்து மாதம் 26 ஆந் திகதி நடைபெறும் என்றும், 2018, ஓகத்து 19 ஆந் திகதி முதல் 2018, ஓகத்து 27 ஆந் திகதி வரை உற்சவம் நடைபெறும் காலம் என்பதை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இந்த அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

1. இது தொடர்பாக 362 ஆம் அத்தியாயம் கொண்ட யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2016, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய 1953/43 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக பொது மக்களின் அவதானத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

2. பகிரங்கப்படுத்தப்பட்ட இச்சட்ட திட்டங்கள் இந்த உற்சவம் நடைபெறும் காலப்பகுதியில் அமுல்படுத்தப்படும்.

சுனில் ஜயலத்,
மாவட்டச் செயலாளர் /அரச அதிபர்,
கம்பஹா.

மாவட்டச் செயலகம்,
கம்பஹா,
2018, யூலை 18.

8-218

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

அதுரலிய யஹமுள்ள போதிருக்காராம கம்பார தேவாலயத்தின் எஸெல பெரகரா - 2018

தென் மாகாணத்திலே மாத்தறை மாவட்டத்திலே அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவிலே யஹமுள்ள போதிருக்கராம கம்பார தேவாலயத்தின் வருடாந்த எஸெல பெரகரா - 2018, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி ஆரம்பமாகி ஓகத்து மாதம் 27 ஆந் திகதி முடிவுறும், என்பதை (175 ஆம் அத்தியாயம்) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட 2012, யூன் மாதம் 07 ஆந் திகதி இலக்கம் 1709/14 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் 02 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறியத் தரப்படுகின்றது.

2012, யூன் மாதம் 07 ஆந் திகதி இலக்கம் 1709/14 ஐக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் மேற்கூறப்பட்ட காலப் பிரிவின் குறித்த ஒழுங்கு விதிகளின் கீழ் 02 ஆம் உப பிரிவின் கீழ் விபரிக்கப்படுகின்ற "கந்தவுற துல" எல்லையில் அமுலாகும்.

நிரோசா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

அதுரலிய பிரதேச செயலகம்,
2018, யூலை 11.

8-15

## பொல்துபே சமன் தேவாலய எஸல பெரஹெர 2018

01. இவ்வாலயத்தின் 2018 ஆம் ஆண்டின் எஸல பெரஹெர உற்சவத்திற்காக முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் 2018.07.14 ஆந் திகதி கூடிய சுப வேளையில் நிகழ்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- 2018.08.09 ஆந் திகதி பெரஹர ஊர்வலத்தின் உள்வீதி வலம் ஆரம்பமாகும்.
- 2018.08.22 ஆந் திகதி மஹா பெரஹர வெளிவீதி வலம் நடைபெறும்.
- 2018.08.27 ஆந் திகதி வலஹுன் எல்ல முகலான நீர் ஊற்றில் நீர் வெட்டு வைபவத்தின் பின்னர் பெரஹர ஊர்வலம் ஆலயத்திற்குள் பிரவேசிப்பதோடு எஸல பெரஹர உற்சவம் நிறைவுறும்.

2. ஆலயத்திற்கு வடக்கே: வீதி. எம். கே. லூயிஸ் சிங்கோ, எம். கே. பொடி மஹத்மயா ஆகியோரின் காணியும்; கிழக்கே: சிறிமல், எம். கே. விஜேதாஸ ஆகியோரின் காணியும்; தெற்கே: ரன்பண்டாரவின் காணியும் கல்படியவத்த எனும் இடமும்; மேற்கே: பி. எம். விஜேஹாமி மற்றும் நோபட் சிந்தாமணி ஆகியோரின் காணியுமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை பக்தர்கள் ஒன்றுகூடி வைபவத்தினை கண்டுகளிப்பதற்காக ஒழுங்கமைத்துள்ளேன்.

3. விகார வளாகம், போதி வளாகம் மற்றும் ஆலய வளாகமாக கருதப்படும் இடங்களில் போசணம் செய்தலை தடை செய்கின்றேன்.

4. மேல் வளாகம், சைத்திய வளாகம், விகார வளாகம் ஆகிய அனைத்து வளாகங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கின்றேன்.

5. கீழ் வீதியில் தெற்கே பிரதான படிக்கட்டுகளிலிருந்து சிம்மாசன மண்டபம் வரையும் கல்படிக்கட்டு வரையும் கிழக்கே நாட்டிய அறை வரையும் கீழ் வீதியில் தேவாலய பக்கத்திற்கு ரத வளாக மதிலிலிருந்து சைத்திய பிரிவு வரையும் என்னால் தெரிவு நியமிக்கப்பட்ட வளாகம் வரையும் மீண்டும் ரத இல்ல வளாகத்திற்கு கிழக்கிலிருந்து மற்றும் தெற்கே கீழ் பிரிவு ரத இல்ல முன் பக்கத்தில் தேவாலயத்திற்கு கிழக்கு எல்லை அருகில் வியாபாரம் செய்தலுக்காக பெரஹெர ஊர்வலம் செல்வதற்கு தடை ஏதும் இல்லாத வண்ணம் அனுமதி அளிக்கின்றேன்.

6. மேற்குறிப்பிட்ட (04, 05) சரத்தில் நியமிக்கப்பட்டுள்ளதன் படி தேவாலய வளாகத்திலும் வேறு ஸ்தானங்களிலும் வியாபாரம் செய்தலை முழுமையாக தடை செய்கின்றேன்.

7. பிரதான வீதியில் தனியார் வாகனங்களை நிறுத்துதலை தடை செய்கின்றேன். சைக்கிள் மற்றும் வண்டி உட்பட அனைத்து வாகனங்களையும் வீதியில் அல்லது முகாம் பொறுப்பு அதிகாரியின் அனுமதிப் பத்திரம் இன்றி முகாம் வளாகத்திற்குள் உட்செல்தலை தடை செய்கின்றேன்.

8. என்னால் முகாம் வளாகத்திற்குள் வியாபாரம் செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டினை குத்தகைக்கு விடுதல் பற்றி அறிக்கை மூலம் விளம்பரப்படுத்துவேன்.

9. குத்தகைக்கு எடுக்கும் வியாபாரக் காணியில் அமைக்கப்படும் தற்காலிக கட்டிடங்கள் சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு உட்பட வேண்டும். இடத்தினை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எஸல உற்சவத்தின் பின்னர் முகாம் வளாகத்தின் உள்ளே பொலித்தீன் மற்றும் அனைத்து கழிவுகளையும் சேர்த்து சுகாதார பரிசோதகரின் ஆலோசனைக்கு அமைய அகற்ற வேண்டும்.

10. என்னிடம் அனுமதி பெறாமல் ஆலய வளாகத்தில் எந்தவொரு கட்டிடம் அமைத்தலையும் தடைசெய்கிறேன்.

11. பட்டாசு மற்றும் வெடிகளை இப்பிரதேசத்தில் வெடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

12. பிரதேச செயலாளரின் அதிகாரம் பெற்ற அதிகாரிகளின் அனுமதி இன்றி யாரொருவரினாலும் முகாம் வளாகத்தில் டிக்கட், கொடி விற்பனை செய்தல் அல்லது வேறு எவ்வழியிலாவது பணம் சேர்க்கக்கூடாது.

ஜே. எல். சீ. கே. ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
இம்புல்பே.

8-14

---

## அஞ்சல் திணைக்களம்

### அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டத்தின் 45 ஆவது பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் விதி

2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரை விநியோகிக்கப்பட்ட காசுக்கட்டளைகள்.

காசுக்கட்டளை ஒன்று அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து ஆறு மாதத்திற்குச் செல்லுபடியாகும். சில தவிர்க்க முடியாத காரணங்களினால் காலங்கடந்த காசுக் கட்டளைகள் அதன் விநியோக மாதத்தின் இறுதித் தினத்திலிருந்து இரண்டு வருடங்களுக்குள் அதனை மாற்றிக் கொடுக்க முடியும். இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காசுக் கட்டளைகள் எக்காரணங்களிற்காகவும் மாற்றிக் கொடுப்பதற்கோ கால நீடிப்புச் செய்வதற்கோ முடியாது. இது போன்ற காசுக் கட்டளைகளின் பெறுமதி அரசாங்கத்தின் வருமானத்திற்கு வரவு வைக்கப்படும்.

02. ஆனால் பின்வரும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் இரண்டு வருடங்களிற்குள் மாற்றப்படாத காசுக் கட்டளைகள் அரசாங்க வரவுக் கணக்கிலிருந்து அதற்குரிய தண்டப் பணத்தை அறவிட்டு மாற்றிக் கொடுக்க முடியும்.

I. நீதிமன்றத்தில் சமர்ப்பித்த காசுக் கட்டளைகள்

II. சட்ட நிமித்தம் காரணமாக வீட்டு வாடகை கட்டுப்பாட்டாளர் சபையினால் தடுத்து வைக்கப்பட்ட காசுக் சட்டளைகள்

III. பணத்தை பெறுபவர் வெளிநாடு சென்றிருந்தால் (கடவுச் சீட்டு சமர்ப்பித்தல் வேண்டும்)

IV. பணத்தைப் பெறுபவர் மோசமாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்தால் (அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் உறுதிப்படுத்தக்கூடிய வைத்தியச் சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்)

03. மேற்படி 02 I, II இல் கூறப்பட்ட காசுக் கட்டளைகளை இது சம்பந்தமான வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கும் தினத்திலிருந்து 03 மாத காலத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்னரோ காசுக் கட்டளை சம்பந்தமான விபரங்களடங்கிய வழக்கு இலக்கத்துடன் 02 I, II இன் கீழ் காசுக் கட்டளை சமர்ப்பிப்பதற்கு வசதியீனமாக இருந்தால் அதற்கான ஆவணங்களை காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாளருக்கு எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

04. அவ்வாறு தற்பொழுது நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குக்காகவும் வேறு சட்ட நோக்கங்களுக்காகவும் நீதிமன்ற கட்டளை மூலம் தடுத்து வைக்கப்பட்டுள்ள காசுக் கட்டளைகள் வீட்டு வாடகை கட்டுப்பாட்டாளர் சபை வழக்கு சம்பந்தமாக தடுத்து வைக்க வேண்டிய காசுக் கட்டளை கள் திணைக்களங்கள் மற்றும் அமைச்சு மட்டத்தில் மேற் கொள்ளப்படும் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் காசுக் கட்டளைகள் இதற்குள்ளடங்காது.

05. 2015.01.01 ஆந் திகதி தொடக்கம், 2015.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்டுள்ள காசுக் கட்டளைகளுக்கு இது சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரித்த தினத்திலிருந்து மூன்று மாதங்களிற்குள் வரையுமே மீளளிப்புச் செய்ய முடியும். இது சாதாரண காசுக் கட்டளைகள் மற்றும் பெறுமதி செலுத்தப்பட வேண்டிய காசுக்கட்டளைகள் இலத்திரனியல் காசுக்கட்டளைகள், பெக்ஸ் காசுக்கட்டளைகள் சகலவற்றிற்கும் பொருந்தும். அவ்வாறு மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டதன் கீழ் காசுக்கட்டளைகளின் பெறுமதி அரசாங்க வருமானத்துக்கு வரவு வைக்கப்பட்டிருந்தால் அந்தக் காசுக் கட்டளைகளின் பெறுமதி நிதிப் பிரமாணங்களுக்கு அமைய வருமானத்தில் மீளச் செலுத்துவதாக கவனத்தில் கொண்டு உரியவர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

06. ஆகவே, மேற்படி 02 ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு காசுக் கட்டளைகளுக்கான பணத்தை மீளளிப்பதற்கு கவனத்தைச் செலுத்தும் பொருட்டு எழுத்துமூலம் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள் மற்றும் உரிய காசுக்கட்டளையுடன் காசுக்கட்டளைச் சேவை கட்டுப்பாட்டாளருக்கு கீழ்க் காணப்படும் முகவரிக்கு இந்த வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 03 மாதத்துக்கு உள்ளோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்புமாறு மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், வாடகை கட்டுப்பாட்டாளர் சபை, அரசாங்க கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கின்றேன்.

கட்டுப்பாட்டாளர் காசுக் கட்டளைச் சேவைகள்
சாசுக் கட்டளைச் சேவைகள் பிரிவு,
பிரதி அஞ்சல் அதிபதி (மத்திய மாகாண) அலுவலகம்,
அஞ்சல் கட்டடத் தொகுதி,
அஞ்சல் திணைக்களம்,
கண்டி.

07. அதன்படி 2015.01.01 ஆந் திகதி தொடக்கம் 2015.12.31 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட இந்த அறிவித்தலின் இரண்டாவது பந்தியில் காணப்படும் விடயங்கள் நான்குக்கும் சம்பந்தமில்லாத செல்லுபடியாகும் காலம் முடிவடைந்த காசுக் கட்டளைகளுக்காக பணம் மீளச் செலுத்துமாறு இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்ட தினத்திலிருந்து மூன்று மாதங்களின் பின்னர் விடுக்கப்படும் வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. எக்காரணம் கொண்டும் அவ்வாறான காசுக்கட்டளை களுக்கான பணம் மீளச் செலுத்தப்பட்டமாட்டாது என்றும் இதன் மூலம் அறியத் தருகின்றேன்.

08. 2015.01.01 ஆந் திகதிக்கு முன் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு காசுக்கட்டளைக்கும் எக்காரணம் கொண்டும் விடுக்கப்படும் வேண்டுகோளுக்காக பணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

எம்.எச். அப்துல் ஹலீம்,
அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும்
முஸ்லிம் சமய விவகார அமைச்சர்.

08-96

---

**1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, கடன் இணக்கக் கட்டளைச் சட்டம்**

*25 ஆம், 26 ஆம் பிரிவுகளின் கீழ் அறிவித்தல்*

1941 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1959 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கட்டளைச் சட்டத்தினாலும் 1964 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1973 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1978 ஆம் ஆண்டின்

19 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1941 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க கடன் இணக்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ், அதற்கான அட்டவணையில் உள்ள விண்ணப்பத்திற்கெதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன் கொடுத்தவருக்கும் கடனாளிக்கும் இடையில் இணக்கமொன்றினை ஏற்படுத்தும் முயற்சியை மேற்கொள்ள கடன் இணக்க சபை உத்தேசித்துள்ளது.

2. ஆதலால், சம்பந்தப்பட்ட கடன் கொடுத்தவர்கள், சபையின் முன் தோற்றுமாறு அவர்கள் தேவைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் கீழ்க் கண்ட கடனாளிகளிடமிருந்து தங்களுக்கு வருமதியாகவுள்ள கடன்களின் விவரங்களை சபைக்கு கொடுத்துதவுமாறு மேற்படி கட்டளைச் சட்டத்தின் 25(1), 26(1) ஆகிய பிரிவுகளினது நியதிகளின்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ரோஷனி ஹெட்டிகே,
செயலாளர் (பதில்),
கடன் இணக்கச் சபைத் திணைக்களம்.

கடன் இணக்கச் சபைத் திணைக்களம்,
இல. 35ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை,
கொழும்பு 08,
2017, யூலை 17.

**அட்டவணை**

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (01) 44666 | திரு. எல்விட்டிகலகே தொன் குணரத்ன 159/2ஏ, கொஸ்கஹஹேன, எரெவ்வல வீதி, பன்னிபிட்டிய.<br><br>திருமதி கமகே ரூபிகா பெரேரா 159/2ஏ, கொஸ்கஹஹேன, எரெவ்வல வீதி, பன்னிபிட்டிய.<br><br>திரு. எல்விட்டிகலகே தொன் கசுன் கல்ஹார, கொஸ்கஹஹேன, எரெவ்வல வீதி, பன்னிபிட்டிய.<br><br>திரு. எல்விட்டிகலகே தொன் கவிந்து ரோஷண கொஸ்கஹஹேன, எரெவ்வல வீதி, பன்னிபிட்டிய. | திருமதி தல்பே வெங்கப்புலி ஆரச்சிகே மாலா மதுரிகா, 195/2 சீ, ரத்மல்தெனிய, எரெவ்வல, பன்னிபிட்டிய. |
| (02) 44665 | திரு. தொன் உதயனந்த ரணசிங்க வீரசேகர, 156, ஹொரபே, றாகம. | திருமதி ஜயதுங்கே நெலா ஸ்ரீமதீ, 156/4, சிறிவர்தன வீதி, ஹொரபே, றாகம. |
| (03) 43256 | திரு கிங்ஸ்லி ஜோன்ஸ், இல. 13/2, யமந்தாவ, அலுவிஹாரே, மாத்தளை. | திரு. தொன் நோர்ட்டன் வாசக்கார, 35/4, ஹாரகம, குருதெனிய, கண்டி. |
| (04) 43895 | திரு. மொரகொல்லே வீரசிங்கெதர, ஜயசிங்க, இல. 19, மொரகொல்ல, பிலவல. | திரு. தொன் நோர்ட்டன் வாசக்கார, இல. 4/35, ஹாரகம, குருதெனிய. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| விண்ணப்ப இல. | கடனாளியின் பெயரும் முகவரியும் | கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும் |
|---|---|---|
| (05) 44682 | திருமதி கமராலாகே பவித்திரா, தனஞ்சனீ கமகே, 447, தங்கல்ல, பெபிலியவல. | சீ. டபிள்யூ. எலயன்ஸ் பிரைவட் லிமிடட் கம்பனி, 14, முதலாம் மாடி, புதிய சந்தை தொகுதி, கிறிந்திவெல. |
| (06) 44697 | திருமதி தொட்டகமுவகே அனோமா சஜீவனீ, 86/ஏ, ஜயந்தி வீதி, கனேவெல, பொக்கணுவிட்ட. | திரு. எரெவ்வல தொடங்கொடகே பிரியங்க நிரஞ்சன், 387/2, மீமன, பொக்குணுவிட்ட. |
| (07) 44700 | திருமதி திரிமான்ன ஹெட்டிகே இந்திராணி மாலனீ, 651/4, துடுவேகெதர, றாகம. | திருமதி வித்தானகே தொன் பேர்லி பெற்றிஷியா, 626/7/சீ, பரணகந்த வீதி, எண்டேரமுல்ல, வத்தளை. |
| (08) 44688 | திரு. ஹேவாவித்தாரனகே அநுர பிரியந்த 71/ஏ, வேவெல்லகம, குன்னேபான. | திருமதி வித்தாரன முதியன்சேலாகே கலேகெதர லலிதா குமாரி, 22/1ஏ, லேவெல்லகம, குன்னேபான. |
| (09) 43074 | திரு. ரத்நாயக்க ஹிட்டிஹாமில்லாகே புத்ததாச சிசிர குமார, யமுனா வெத மெதுர, பிங்கிரிய. | திருமதி ரத்நாயக்க முதியன்சேலாகே நிசாந்தி மானெல் ரத்நாயக்க, பகல கொஸ்வத்த, ஹல்மில்லவெவ.<br><br>திரு. முதுமிணி சரத்சிறி குமார, பகல கொஸ்வத்த, ஹல்மில்லவெவ. |
| (10) 44712 | திருமதி அப்பொகோட்டகே உபேந்திரி நிலூகா இல. 74, கட்டியல, தெமன்ஹந்திய. | திரு. பிலிப்பென்னகே காமினி சில்வா இல. 6, 1 ஆம் மாவத்தை, பேஷகர்ம கம்மானய, தெமன்ஹந்திய. |
| (11) 44709 | திருமதி உல்பாகொட பதிர ஆரச்சிலாகே தோன டானி ருக்ஷியா கருணாநாயக்க, 69பீ, பட்டியகம, பூகொட. | திரு. குடாபேதுரு அச்சில்லாகே சமன் ஸ்ரீயாரத்ன, 74, நாகொட, ஊராபொல. |
| (12) 44686 | திருமதி டி முன்குருவாரிகே சுமிதா பெர்னாந்து 31/சீ, பன்சலை சந்தி, நல்லதரன்கட்டுவ. | திருமதி கித்துலமுல்ல கமகே திலினி ஹங்சிகா, இகலவத்த, வட்டரத்கொட, பெலிஅத்த. |
| (13) 44735 | திருமதி குருவிட்ட ஆரச்சிகே வாசனா லக்மிணி பெரேரா, 386/3/1, போதிராஜ மாவத்தை, ஹோமாகம. | திரு. சூலேந்திர தேவப்பிரிய சிங்கசேன 10/24, வெல்யாய வீதி, நாவின்ன, மகரகம. |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *விண்ணப்ப இல.* | *கடனாளியின் பெயரும் முகவரியும்* | *கடன் கொடுத்தவரின் பெயரும் முகவரியும்* |
|---|---|---|
| (14) 44737 | திருமதி களுபோவிலகே தோன மேரி புலொரிடா 259/1, இத்தகொடெல்ல வீதி, கிம்புலாபிட்டிய. | திரு. ஹிரியமுல்ல வித்தானகே மனோஜ் சஜீவ கருணாரத்ன, எட்டியாவல வடக்கு, தங்கொட்டுவ. |
| (15) 42250 | திருமதி அலங்கார லிலியட் சில்வா, விஜித மாவத்தை முன்னால், நாகொட, களுத்துறை தெற்கு.<br><br>திருமதி அலங்கார வயலட் சில்வா விஜித மாவத்தை முன்னால், நாகொட, களுத்துறை தெற்கு.<br><br>திரு. அலங்காரகே ஜயசேகர சில்வா விஜித மாவத்தை முன்னால், நாகொட, களுத்துறை தெற்கு. | திருமதி விதானபதிரணகே நெல்கா நிலந்தி, 1050, மதுகம வீதி, நாகொட, களுத்துறை தெற்கு. |

*8-138*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

*கிளை : ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் - 030*

*கடன் பெற்றவர்கள் : 1. திரு. சுப்பிரமணியம் பரராஜசிங்கம்*
*2. திருமதி தயாநிதி பரராஜசிங்கம்*
*3. திரு. கருணாநிதி தயாளன்*

*கடன் வசதியும் தொகையும் :*

*நிரந்தர வங்கி மேலதிகப் பற்று - ரூபா. 20,000,000.00*

*வர்த்தகக் கடன் - ரூபா. 65,000,000.00*

*மீள் அட்டவணைப்படுத்திய*

*தற்காலிக வங்கி மேலதிகப் பற்று - ரூபா. 15,000,000.00*

*வழங்கப்பட்ட திகதி : 2015.09.04 ஆந் திகதி மற்றும் 2017.03.31 ஆந் திகதி*

*அடிவரம்பு விலை : ரூபா. 103,000,000.00*

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையின் மூலம் 2018.04.24 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட அவர்களின் கூட்டத்தில் ஏகோபித்தவாறு பின்வரும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்ட தென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*"மக்கள் வங்கியின் சார்பில் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு எஸ். சண்முகலிங்கம் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.09.03 ஆந் திகதியிடப்பட்ட 5126 ஆம் இலக்கத்தைக் கொண்ட முதனிலை ஈட்டு முறி மீதும் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு என். சிந்துஜா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.03.31 ஆந் திகதியிடப்பட்ட 386 ஆம் இலக்கத்தைக் கொண்ட இரண்டாம் நிலை ஈட்டு முறி மீதும் திரு. சுப்பிரமணியம் பரராஜசிங்கம், திருமதி தயாநிதி பரராஜசிங்கம் மறறும் திரு. கருணாநிதி தயாளன் ஆகியோர் நிலுவைக் கொடுப்பனவைச் செலுத்த தவணை தவறியிருந்தமை மற்றும் 5126 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 386 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான கூறப்பட்ட ஈட்டு முறிகள் மீது ஆறு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து நானூற்று ஏழு ரூபா முப்பது சதம் மட்டும் (ரூபா 6,83,66,407.30) கொண்டதும் மற்றும் ஒரு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து எண்பத்து ஓராயிரத்து அறுநூற்று நாற்பத்து ஆறு ரூபா ஒன்பது சதம் (ரூபா 1,56,81,646.09) கொண்டதுமான தொகையொன்று கூறப்பட்ட மக்கள் வங்கிக்கு தற்போது நிலுவையாகவும் செலுத்த வேண்டியுமுள்ள காரணத்தின் நிமித்தம்.*

*01. 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம்*

இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையானது, பின்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட கொடுப்பனவை (ஏதுமிருப்பின்) கழித்து மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ ஆம் பிரிவின் கீழ் விற்பனைச் செலவுகள் மற்றும்ஏனையகட்டணங்கள்உள்ளடங்கலாக2015.09.04ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை சராசரி நிறையளித்த முதன்மை கடன் வழங்கல் வீதத்துடன் (ஏடபிள்யூபீஎல்ஆர்) 5.5% இனைக் கூட்டிய வீதத்திலும் 17% இனைக் கூட்டிய வீதத்திலும் முறையே ஆறு கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து எண்பது ஆயிரத்து அறுநூற்று அறுபத்து ஆறு ரூபா எழுபத்து இரண்டு சதம் (ரூபா 6,48,80,666.72) கொண்டதும் மற்றும் ஒரு கோடியே முப்பத்தேழு இலட்சத்து இரண்டாயிரத்து நானூற்று முப்பது நான்கு ரூபா இருபத்து இரண்டு சதம் மட்டும் (1,37,02,434.22 ரூபா) கொண்டதுமான கூறப்பட்ட தொகையினை அறவிடுவதற்காக யாழ்ப்பாணத்தின் உரிமம் பெற்ற ஏலமிடுபவரான திரு. கார்த்திகேசு பொன்னையா பாலகிருஷ்ணன் அவர்களினால் பகிரங்க ஏலம் மூலம் , 5126 ஆம் இலக்கத்தைக் கொண்டதும் 386 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான கூறப்பட்ட ஈட்டு முறிகள் வாயிலாக கூறப்பட்ட வங்கியில் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தையும் மனையிடத்தையும் விற்பனை செய்வதற்கு, இத்தால் தீர்மானிக்கின்றது.''

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரணம்

வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஜே/80 கிராம அலுவலர் பிரிவின் பெரிய கடைக்குள் யாழ்ப்பாணம், பொன்னாலை வீதி 14, 14/1, 16ஏ, 16பீ எனும் மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட, யாழ்ப்பாண மாநகர சபை எல்லைகளுக்குள் 18 ஆம் இலக்க வட்டாரத்திற்குள் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் வண்ணார்பண்ணை கோயிற்பற்றில் வண்ணார்பண்ணை தென்கிழக்கில் அமைந்துள்ள, 2014.10.02 ஆந் திகதியிடப்பட்ட 1573பீ ஆம் இலக்க நில அளவீட்டுத் திட்டப்படத்தில் துண்டு 1, 2, 4, 5 மற்றும் 6 என விபரிக்கப்பட்டதும் உரிமம் பெற்ற நில அளவையாளரும் மட்டமாக்குநருமான எஸ். சுப்பிரமணியம் அவர்களினால் தயாரிக்கப்பட்டதுமான நான்கு லாச்சம் வீ. சி மற்றும் பத்து தசம் ஒன்பது எட்டு குளிகள் (4 லாச்சம் வீ. சி மற்றும் 10.98 குளிகள்) கொண்ட விஸ்தீரணத்தில் ''புளியடி தண்டிக்குளம் தலைமடை செங்கலநீரோடை வயல் செங்கலநீரோடை தலைமடை மற்றும் செங்கல நீரோடை தண்டிக்களம் தலைமடை'' என அழைக்கப்படும் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான காணித் துண்டொன்று. சகல கட்டடங்களுடனும் ஏனைய சேர்ந்தவைகளுடனும் ஒன்றுசேர்ந்த நான்கு லாச்சம் வீ.சி மற்றும் பத்து தசம் ஒன்பது எட்டு குளிகள் (4 லாச்சம் வீ.சி மற்றும் 10.98 குளிகள்) கொண்ட கூறப்பட்ட விஸ்தீரணமானது பின்வருமாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. கிழக்கு : எஸ். பி. நாகரத்தினத்தின் ஆதனம் மூலமும் நியூ லலிதா கட்டடத்தின் ஆதனம் மூலமும்; வடக்கு : எஸ். தியாகராஜாவின் ஆதனம் மூலம் ; மேற்கு : நில அளவையாளர் எஸ். ஏகாம்பரம் அவர்களினால் ஆக்கப்பட்ட 170 ஆம் இலக்க நில அளவீட்டுத் திட்டப் படத்தில் 3 ஆம் இலக்க துண்டாக அடையாளமிடப்பட்ட ஆதனத்தின் பகுதி மூலமும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். சுப்பிரமணியம் அவர்களினால் ஆக்கப்பட்ட 1573 பீ ஆம் இலக்க நில அளவீட்டுத் திட்டப் படத்தில் 3 ஆம் இலக்க துண்டாக அடையாளமிடப்பட்ட ஆதனம் மூலமும்; தெற்கு : 1573 பீ ஆம் இலக்க கூறப்பட்ட நில அளவீட்டுத் திட்டப் படத்தில் 3 ஆம் இலக்க துண்டாக அடையாளமிடப்பட்ட ஆதனம் மூலமும் ஸ்ரான்லி வீதி மூலமும்.

இதிலுள்ள அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பிரகாரம்,

உதவிப் பிராந்திய முகாமையாளர்,
யாழ்ப்பாணம்.

முத்திரை : எஸ். நித்தியானந்தன்
உதவிப் பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
பிராந்திய தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பிராந்திய முகாமையாளர்
யாழ்ப்பாணம்

முத்திரை : கே. சுசீந்திரன்
பிராந்திய முகாமையாளர்
மக்கள் வங்கி
பிராந்திய தலைமை அலுவலகம்
யாழ்ப்பாணம்

2018, மாச்சு 29.

யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு திரு. சொக்கலிங்கம் சண்முகலிங்கம் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிடப்பட்ட 5126 ஆம் இலக்கத்தைக் கொண்ட முதனிலை ஈட்டு முறிக்கும் யாழ்ப்பாண பிரசித்த நொத்தாரிசு செல்வி சிந்துஜா நடேசன் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதியிடப்பட்ட 386 ஆம் இலக்கத்தைக் கொண்ட இரண்டாம்நிலை ஈட்டு முறிக்கும் இணங்க, ஆதனத்தின் விவரணம் சோதிக்கப்பட்டுள்ளது.

உதவிச் சட்ட உத்தியோகத்தர்,
பிராந்திய தலைமை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

முத்திரை : திருமதி சிந்துஜா சுகாஷ் எல்எல்.பீ
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
சத்தியப்பிரமாண ஆணையாளர்
மற்றும் கம்பனிச் செயலாளர்
யாழ்ப்பாணம்

8 - 245

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல்.சீ.**

*(1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆவது பிரிவினால் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 2031859

பிரவுன் கொயர் எக்ஸ்போட் (பிரைவேட்) லிமிடெட் (முன்பு கிலன் லொஜ்ஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் என்று சொல்லப்பட்டது)

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் 29.06.2018 ஆந் திகதி கூடிய கூட்டமொன்றில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

"கடன் எடுத்த நத்தாண்டிய தப்புவ இலக்கம் 67ஏ, ராஜபக்ச எஸ்டேட் என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள இலங்கை கம்பனி சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட பிரவுன் கொயர் எக்ஸ்போட் (பிரைவேட்) லிமிடெட் (முன்பு சொல்லப்பட்டது கிலன் லொஜ்ஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் இவ்வட்டவணையில் முதலாவது சொல்லப்பட்ட காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். எம். சி. பி. ஏரத் 08.04.2014 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 2225 மற்றும் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. ஏ. எம். டி. பெரேராவின 27.07.2016 ஆந் திகதியுடைய ஈட்டு முறி இலக்கம் 357 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,

அத்துடன் கடன் எடுத்த நாத்தண்டிய தப்புவ இலக்கம் 67ஏ, ராஜபக்ச எஸ்டேட் என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள இலங்கை கம்பனி சட்டப்படி ஸ்தாபிக்கப்பட்ட பிரவுன் கொயர் எக்போட் (பிரைவேட்) லிமிடெட் இவ் அட்டவணையில் 2 ஆவது சொல்லப்பட்ட இயந்திரங்கள் எல்லாம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக 09.12.2016 ஆந் திகதியுடைய முறி இலக்கம் எம்/என்ஏரீ/ 2016/ 04 மூலம் ஈட்டு வைத்து செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்,

அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 27.04.2018 ஆந் திகதி வரை அமெரிக்கன் டொலர் US $ 481,064.73 அல்லது சமமான இலங்கை ரூபா வருமதியாக உள்ளதாலும், அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்களினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் படி மேற்படி ஈட்டு முறி இலக்கங்கள் 2225, 357 மற்றும் எம்/ என்ஏடீ/ 2016/04 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈட்டு வைக்கப்பட்டுள்ள இவ் 1 ஆவது மற்றும் 2 ஆவது அட்டவணைகளில் விபரிக்கப்பட்ட காணிகளையும், இயந்திரங்களையும் மேற்படி சொல்லப்பட்ட அமெரிக்கன் டொலர் US $ 4,81,064.73 வுடனும் (இலங்கை ரூபாவுக்கு சமமானதும்) 28.04.2018 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை அமெரிக்கன் டொலர் US $ 4,68,700.00 க்கு (அல்லது இலங்கை ரூபாவுக்கு சமமானது) ஆண்டொன்றுக்கு LIBOR + 5.50% சத வட்டியும் விளம்பரச் செலவுகள் (பணம் செலுத்திய பின் கழித்து) வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு - 12, புதுக்கடை வீதி, இலக்கம் 200, 2 ஆவது மாடியில் ஏலதாரருக்கு திரிவின்கா சேனாநாயக்க உத்தரவு பெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

**1 ஆவது அட்டணை**

வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாதம்பே மாவட்ட செயலாளர் எல்லையில் இலக்கம் 547ஏ மாகம வடக்கு கிராம அலுவலர் எல்லையின் நாத்தண்டிய பிரதேச சபை எல்லை யில் யாகம்பத்து பிட்டிகல் கோரளை வடக்கு புளியன்கர கிராமத்தில் உள்ள கருணுகுளிய எஸ்டேட் குரூப் காணிக்கு நில அளவையாளர் ஆர். என். கருணாதிலகவின் 03.05.2005 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 1425பி இல் காண்பிக்கப்பட்ட லொட் காணியின் எல்லைகள் - வடக்கு: அல்விசுக்கு சொந்தமான காணி; கிழக்கு: வரைபட இலக்கம் 1425பி இல் காண்பிக்கப்பட்ட லொட் 2; தெற்கு : பிரதேச சபை ரோட்; மேற்கு: நில அளவையாளர் எச். ஏ. எம். சி. பண்டாரவின் இலக்கம் 4010 வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட லொட் 1, எல்லைகள் 03ஏ. 0றூ.0பே. மேற்படி வரைபட இலக்கம் 1425பி இன் படி இக்காணி சிலாபம் காணிப் பதிவகத்தில் எப் 11/25 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**2 வது அட்டவணை**

Two Numbers of doubled moulded semi automatic grow bag making machines installed on a firm concrete foundations at Brown Coir Export (Pvt) Ltd., situated at Sri Sumangala Road, Mugunuwatawana, North Mahagama, Chilaw.

| | |
|---|---|
| Machine Name | - Grow Bag Making Machine |
| Make | - Made by local company by using imported component such as Hydraulic Pump, Control Valves, Valve Solenoids Hydraulic Cylinders and Electric Motors |
| Motor | - 30Hp, 50Hz, 1500rpm, 420V 3 Phase Motor, Chinese Make |
| Hydraulic Tank Capacity | - 315 Lits |
| Year of Manufacture | - 2013 |

(திருமதி) ரஞ்சனி கமகே,
கம்பனிச் செயலாளர்.

8-135

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2018, யூன் 19 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :

"(கடன்பெறுநர்களான) 2012.03.19 ஆந் தேதிய டபிள்யூ/ஏ 100136 ஆம் இலக்கச் சான்றிதழின் கீழ் மேல் மாகாணம், வியாபாரப் பெயர்கள் மாகாணப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டதும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தை தெஹிவளையில் கொண்டுள்ளதுமான "கொம்யூரா இம்போடர்ஸ்" என்ற பெயர்மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் பங்காண்மையில் தொழில் கொண்டுநடாத்துகின்ற கொழுப்பு 04 ஐச் சேர்ந்த பாலமுத்து ஆறுமுகம் பிரகாஷ் மற்றும் அருணாசலம் ஷார்மிலா என்போர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எச். எம். ஜீ. திசாநாயக்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.10.21 ஆந் தேதிய 1021 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும்,

அத்துடன் பாலமுத்து ஆறுமுகம் பிரகாஷ் மற்றும் அருணாசலம் ஷார்மிலா என்போர், கீழே விபரிக்கப்பட்ட ஆதனங்களுக்கும் வளவுகளுக்குமான தமது இறையிலி உரிமை, உரித்து மற்றும் அக்கறையைச் சொல்லப்பட்ட 1021 ஆம் இலக்க ஈட்டுமுறியின்கீழ் வங்கிக்கு ஈடுவைத்துள்ளனராதலாலும்.

அத்துடன் 2018, மே 31 ஆந் தேதியன்றுள்ளவாறாக நாற்பத்தாறு இலட்சத்து ஐந்நூற்றிமுப்பத்தேழு ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூபா 46,00,537.62) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிமீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும், நாற்பத்தாறு இலட்சத்து ஐந்நூற்றிமுப்பத்தேழு ரூபா அறுபத்திரெண்டு சதம் (ரூபா 46,00,537.62) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட 1021 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டு சொல்லப்பட்ட 1021 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வங்கிக்கு வருமதியான நாற்பத்து மூன்று இலட்சத்துத் தொண்ணூற்றையாயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 43,95,500.00) கொண்ட தொகைமீது 2018, யூன் 1 ஆம் நாளிலிருந்து விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்கப் பதின்மூன்று தசம் ஐந்து சதவீத (13.5%) வட்டியையும், அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, திவங்க அன்ட் சேனாநாயக்க ஏலவிற்பனையாளர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளை பிரதேசசபையின் ஹெந்தலை உபஅலுவலகத்ினுள்ளும் வத்தளை பிரதேச செயலகப் பிரிவினுள்ளும் ஹேகித்த 169 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவினுள்ளும் ஹேகித்த ஹெந்தலையில் அமைந்துள்ளதும "ஹெடவக்ககஹா குருந்துவத்த" எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஹியூ ஆர். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, செத்தெம்பர் 17 ஆந் தேதிய 1659 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 2 எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டம் 1; கிழக்கு : ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 104; தெற்கு: ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 106 மற்றும் மேற்கு : ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 113 (வீதிவழிக்கான ஒதுக்கிடம்); பரப்பளவில் இது, அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்டதும் 1963, மாச்சு 5 ஆந் தேதியிடப்பட்டதுமான ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டவாறு காணித்துண்டங்கள் 6, 15, 17, 36, 53, 70, 75, 87, 102, 112 மற்றும் 113 இன் மீதும் அவற்றின் மேலுமான செல்வழியுரிமையுடன் எட்டுத் தசம் ஒன்று ஐந்து ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0று. 8.155பே.) கொண்டுள்ளதுடன் கம்பஹாக் காணிப்பதிவகத்தில் எல் 91/76 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. உபாலி டீ. ரணசிங்க என்வரினால் தயாரிக்கப்பட்ட 2015, ஓகத்து 28 ஆந் திகதிய 3011 ஆம் இலக்க மிக்க அண்மையிலான வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குருக் கோறளையின் ராகம் பத்துவில் வத்தளை பிரதேசசபையின் ஹெந்தலை உப அலுவலகத்தினுள்ளும் வத்தளை பிரதேச செயலாகப் பிரிவினுள்ளும் ஹேகித்த 169 ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவினுள்ளும் ஹேகித்த ஹெந்தலையில் அமைந்துள்ளதும் "ஹெடவக்கஹா குருந்துவத்த"

எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஹியூ ஆர். சமரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1992, செத்தெம்பர் 17 ஆந் திகதிய 1659 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 2 இன் மீள்நிலஅளவையாகவும் ஏலவேயுள்ள எல்லைகளாகவுமுள்ளதும்) உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. உபாலி டீ. ரணசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2015, ஓகத்து 28 ஆந் திகதிய 3011 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் "ஏ" எனவடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் "ஏ" பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு: 1659 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1; கிழக்கு : ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்தண்டம் 104; தெற்கு : ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 106 ; மற்றும் மேற்கு : ஏ4750 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 113 (வீதிவழிக்கான ஒதுக்கிடம்); பரப்பளவில் இது, எட்டுத் தசம் ஏழு எட்டுப் பேர்ச்சுக்களைக் (0ஏ. 0றூ. 8.78பே.) கொண்டுள்ளது.

நில அளவையாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட 1963, மாச்சு 5 ஆந் திகதிய ஏ4750 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டவாறு, அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் காணித்துண்டங்கள் 6, 15, 17, 36, 53, 70, 75, 87, 102, 112 மற்றும் 113 இன் மீதும் அவற்றின் மேலுமான செல்வழியுரிமையுடனும் கம்பஹா காணிப்பதிவகத்தில் எல் 91/122 இன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

8 - 243

---

## சம்பத் வங்கி பீ. எல்.சீ.

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

லியனகே டிரேடர்ஸ்
கணக்கு இல. 0226 1000 0227

2018.05.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"பீகிவ் 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 02, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை இல. 110 சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக இரத்தினபுரி பிரசித்த நொத்தாரிசுவான கே எல் எம் டி கித்சிரி என்பவரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017, மே 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 2646 எனும் ஈட்டு முறியின் மீது அடகுவைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோஷலிசக் குடியரசின் பெயர் மற்றும் வடிவில் "லியனகே டிரேடர்ஸ்" எனும் வியாபாரத்தின் ஏக உரிமையாளரான லியனகே துஷார சம்பத் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமை யினால், இல. 2646 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் எழுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து தொளாயிரத்து பதின் மூன்று ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 74,85,913.84) 2018, ஏப்பிறல் 05 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட எழுபத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி ஐந்தாயிரத்து தொளாயிரத்து பதின் மூன்று ரூபா எண்பத்தி நான்கு சதம் (ரூபா 74,85,913.84) 2018, ஏப்பிறல் 06 திகதி முதல் இல. 2646 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை அறுபத்தி எட்டு இலட்சத்து ஐம்பத்தி ஒன்பதினாயிரத்து ஐந்நூற்று பத்தொன்பது ரூபா முப்பத்தி ஏழு (ரூபா 68,59,519.37) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின் ஆறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2646 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளேயின் பல்லெ பத்து எஹேலியகொட பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் யத்துதாகொட இல. 136ஜீ எனும் கிராம அலுவலர் பிரிவின் கெந்தன்கம பாஹாலகம யக்குதாகொட கிராமத்தில் அமைந்த "பிரமனயாகெவத்த எனும் ஹல்கஹாலியத்தெஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எஸ். சோமவீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, ஒற்றோபர் 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1686ஏ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் ஏ எனக் குறிப்பிடப்பட்ட காணியின்

எல்லைகளாவன - வடக்கு : இல. 757 எனும் வரைப்படத்தின் லொட் 6 மற்றும் லொட் 7 (ஒரு பகுதி); கிழக்கு : இல. 757 எனும் வரைபடத்தின் லொட் 7 இன் ஒரு பகுதி; தெற்கு : ஹொரதலகேவத்த எனும் அலுத்தபஸ்பெதிஹேவாதுரகெவத்த; மற்றும் மேற்கு : வீதி (பிரதேச சபை), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி மூன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்கள் (0ஏ. 0றூ. 23.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 1686ஏ எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் ஏ கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடுடாகும்.

கூறப்பட்ட கெந்தன்கமபாஹாலகமயக்குதாகொட கிராமத்தில் அமைந்த "பிரமனயாகெவத்த எனும் ஹல்கஹாலியத்தெ ஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஏ. சோமபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 1975, மாச்சு 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 757 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 (ஒரு பகுதி) எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 6; கிழக்கு : ஹல்காஹாலியத்த எனும் விலேலியத்த; தெற்கு : ஹொரதலகேவத்த எனும் அலுத்தபஸ்பெதிஹேவாதுரகெவத்த; மற்றும் மேற்கு : எஹேலியகொடை முதல் யக்குதாகொட வரையான வீதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஏழு பேர்ச்கள (0ஏ. 0றூ. 27பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அனைத்துமுடன், கூறப்பட்ட இல. 757 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் எல் 25/119 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-184

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

02.04.2018 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

"1. பிரசித்த நொத்தாரிசு டீ. ஜீ. விஜேசிங்க அத்தாட்சிப்படுத்திய 25.02.2014 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 851 மற்றும் பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. எஸ். கயானி அத்தாட்சிப்படுத்திய 24.03.2015 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 199 ஆகியவற்றின் பேரில் வத்தளை எந்தேரமுல்லை சன்பிளர் கார்டின், இல. 475/3 ஐச் சேர்ந்த திரு. கமகே கருணா சாந்த மற்றும் திருமதி பனாபிட்டிய கங்கானமகே ராஜினி காந்தி பெரேரா ஆகியோரிடமிருந்து கடன் மீது முதலும் 19.01.2018 ஆந் திகதி வரை வட்டியும் ஐம்பது இலட்சத்து இரண்டு ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தொன்பது ரூபா எழுபத்தொன்பது சதம் (ரூபா 50,02,889.79) அத்துடன் நாற்பத்தாறு இலட்சத்து அறுபத்தி நான்கு ஆயிரத்து நூற்றி எழுபத்தொன்பது ரூபா நாற்பத்தாறு சதங்களில் (ரூபா 46,64,179.46) ஆண்டுக்கு பன்னிரெண்டு தசம் ஐந்து (12.5%) வீதத்தில் 20.01.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் லேதிகப்பற்று மீது முதலும் 19.01.2018 ஆந் திகதி வரை வட்டியும் இருபது இலட்சத்து பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று எண்பத்து நான்கு ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூபா 20,19,384.95) அத்துடன் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்றெட்டு ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தெட்டு ரூபா அறுபத்திரெண்டு சதங்களில் (ரூபா 19,98,978.62) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 20.01.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. மேற்குறிப்பிடட 25.02.2014 ஆந் திகதியிட்ட முறி இல. 851 மற்றும் 24.03.2015 ஆந் திகதியிட்ட முறி இல. 199 ஆகியவற்றின் பேரில் கடன் மீது ஐம்பது இலட்சத்து இரண்டு ஆயிரத்து எண்ணூற்றி எண்பத்தொன்பது ரூபா எழுபத்தொன்பது சதங்களும் (ரூபா 50,02,889.79) மேலதிகப்பற்று மீது இருபது இலட்சத்து பத்தொன்பது ஆயிரத்து முந்நூற்று எண்பத்து நான்கு ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூபா 20,19,384.95) அத்துடன் 20.01.2018 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் டீ மற்றும் எச் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, மத்திய பஸ்தரிப்பு நிலைய கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### முதலாவது அட்டவணை

மேல்மாகாணம் கம்பஹா மாவட்டம் சியனே கோரளை அதிகாரி பற்றுவில் பியகம பிரதேச செயலகப்பிரிவில் பியகம பிரதேச சபை எல்லைகளுள் ஹெய்யன்துடுவ கிழக்கு ஹெய்யன்துடுவ 375/பி இலக்க கிராம அலுவலர் பிரிவில்

ஹெய்யன்துடுவயில் அமைந்த “கொன்னகஹலந்த” என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எல். கே. சீ. என். ஏப்பாசிங்ஹ தயாரித்த 2013, நவெம்பர் 05 ஆந் திகதியிட்ட வரைபட இல. 7431 இல் விபரித்த துண்டு எக்ஸ் என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: வரைபட இல. 3375 இல் துண்டு 2எப்/1 இன் பாகமும், வரைபட இல. 3375 இல் ஒன்றிணைத்த துண்டுகள் 2ஈ/2, மற்றும் 2எப்/2 (12 அடி அகலப் பாதை) ; கிழக்கு : வரைபட இல. 33/75 இல் துண்டு 2E1 உம்; தெற்கு: எலயும்; மேற்கு : வரைபட இல. 1090 இல் துண்டு 1எப் உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 7431 இன் படி முப்பத்திரெண்டு தசம் ஐந்து சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0று. 32.50பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இது கம்பஹா காணிப்பதிவகத்தில் என் 128/46 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

1. மேற்குறிப்பிட்டவாறு ஹெய்யன்துடுவயில் அமைந்த “கொன்னகஹலந்த” என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எல். கே. சீ. என். ஏப்பாசிங்ஹ தயாரித்த 2005, யூலை 02 ஆந் திகதியிட்ட வரைபட இல. 3375 இல் விபரித்த துண்டு 2ஈ2 (பாதைக்கு ஒதுக்கிய) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடகிழக்கு: பாதை (ஒன்றிணைத்த துண்டுகள் 2பி, 2சீ/ 1 மற்றும் 2டீ/ 1); தென்கிழக்கு: இக்காணியின் துண்டு 2ஈ/1ம்; தென்மேற்கு: இக்காணியின் துண்டு 2எப்/3 உம்; வடமேற்கு: இக்காணியின் துண்டு 2எப்/2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 3375 இன் படி ஒன்று தசம் மூன்று எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 1.38பே.) விஸ்தீணமுடையது. இது கம்பஹா காணிப்பதிவகத்தில் சீ 746/13 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்டவாறு ஹெய்யன்துடுவயில் அமைந்த “கொன்னகஹலந்த” என அழைக்கப்படும் காணி வரைபட இல. 3375 இல் விபரித்த துண்டு 2F2 (பாதைக்கு ஒதுக்கிய) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு: பாதை (துண்டுகள் 2பி, 2சீ) ஒன்றிணைந்த 1 மற்றும் 2B/1); தென்கிழக்கில்: இக்காணியின் துண்டு 2F/2 உம்; தென்மேற்கு: இக்காணியின் துண்டு 2F/ 3 உம்; வடமேற்கு: இக்காணியின் துண்டு 2F/1 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 3375 இன் படி இரண்டு தசம் சைபர் எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 2.08பே.) விஸ்தீரணமுடையது. இது கம்பஹா காணிப்பதிவகத்தில் சீ 746/12 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

(திருமதி) எச். பீ. ஆர். பத்திரண,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மத்திய பஸ்தரிப்பு நிலையம்.

8 - 269

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

29.06.2018 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

“1. பிரசித்த நொத்தாரிசு ஐ. டீ. கமகே அத்தாட்சிப் படுத்திய 07.10.2016 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 872 இன் பேரில் தெல்வத்த, மெற்றிவல, பராபே, மனுஜயபுர, இல. 26 ஐச் சேர்ந்த திரு. நல்லஹந்தி ஜனகதிமுது குமார என்பவரிடமிருந்து முதலும் 04.05.2018 வரை வட்டியும் அறுபது இலட்சத்து பதினாறு ஆயிரத்து நாநூற்று முப்பத்தொரு ரூபா எழுபத்தாறு சதங்களும் (ரூபா 60,16,431.76) அத்துடன் ஐம்பத்தாறு இலட்சத்து அறுபத்திரெண்டு ஆயிரத்து ஐநூற்று ஆறு ரூபா எழுபது சதங்களில் (ரூபா 56,62,506.70) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 05.05.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்.

2. பிரசித்த நொத்தாரிசு ஐ. டீ. கமகே அத்தாட்சிப்படுத்திய 07.10.2016 ஆந் திகதியிட்ட மேற்குறிப்பிட்ட முறி இல. 872 இன் பேரில் வருமதியாக உள்ள அறுபது இலட்சத்து பதினாறு ஆயிரத்து நாநூற்று முப்பத்தொரு ரூபா எழுபத்தாறு சதங்களும் (ரூபா 60,16,431.76) அத்துடன் ஐம்பத்தாறு இலட்சத்து அறுபத்திரெண்டு ஆயிரத்து ஐநூற்று ஆறு ரூபா எழுபது சதங்களில் (ரூபா 56,62,506.70) ஆண்டுக்கு பதின்மூன்று (13%) வீதத்தில் 05.05.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் டீ மற்றும் எச் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, ஹிக்கடுவ கிளை முகாமையாளருக்கம் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.”

**அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டம், வெள்ளபொட பற்றுவில் அம்பலங்கொட பிரதேச செயலகம் மற்றும் பலப்பிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் போகஹவத்த 88 சீ இலக்க கிராம அலுவலர் பிரிவில் ரண்தொம்பே கிராமத்தில் (தற்போது யாவரும் போகஹவத்த என அழைக்கும்) அமைந்த ஜசென்துலியன ஆரச்சி பதிஞ்சிவஉன் வத்த அல்லது மாதங்கஹவத்த என

அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஈ. கால்லகே தயாரித்த 1971, திசெம்பர் 20 ஆந் திகதியிட்ட வரைபட இல. 512 இல் விபரித்த துண்டு 2 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: அதே காணியின் துண்டு 11 உம்; கிழக்கு : அதே காணியின் துண்டுகள் 3 மற்றும் 4 உம்; தெற்கு : ஹித்தஹந்திவத்தயும்; மேற்கு : நீர் ஓடையும் குணயாகுருவத்தயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 512 இன் படி 3 றூட் இருபது பேர்ச்சுகள் (0ஏ.3றூ.20பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்கள் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது பலப்பிட்டிய காணிப்பதிவகத்தில் ட105/80 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர். எம். சந்ரபால தயாரித்த 2015, செத்தெம்பர் 12 ஆந் திகதியிட்ட அண்மைய வரைபட இல. 1505 இன் படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ரண்தொம்பே கிராமத்தில் (தற்சமயம் போகஹவத்த என யாவரும் அறிந்த) அமைந்த ஜசென்துலியன ஆனோச்சிர பதிஞ்சிவஉன் ஹேன்ததுரவத்த அல்லது மாதங்கஹவத்த மற்றும் மரதானேவத்த ஹேன்தாதுரவத்த அல்லது மரதானேவத்தயின் ஒன்றிணைத்த துண்டுகள் 10 மற்றும் 11 என அழைக்கப்படும் காணியின் வரைபட இல. 1505 இல் விபரித்த துண்டு ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : அதே காணியின் துண்டு 1 உம்; கிழக்கு : அதே காணியின் துண்டுகள் 3 மற்றும் 4 உம்; தெற்கு : பிரதான வீதியும்; மேற்கு : எலயும் குணயகுருவத்தயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1505 இன் படி இருபத்திரெண்டு தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 3றூ. 22.3பே.) விஸ்தீரணமுடையது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

கே. கே. டபிள்யூ. எச். ரத்னவீர,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
ஹிக்கடுவ கிளை.

8 - 267

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

06.06.2018 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கிப் பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:

"1. பிரசித்த நொத்தாரிசு ட. என். குமாரசிங்ஹ அத்தாட்சிப்படுத்திய 11.04.2017 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 299 இன் பேரில் பிட்டகோட்டை, தலவத்துகொட வீதி, இல. 65/1பிஎன்னும்முகவரியைச்சேர்ந்ததிரு.சரத்குமாரசிறி வருஷவித்தான மற்றும் திருமதி பம்பரெந்தே தொன் சந்ரிகா பிரியநந்த ஆகியோரிடமிருந்து தவணைக்கடன் மீது முதலும் 23.04.2018 வரை வட்டியும் மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து நான்கு ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூபா 3,16,01,974.95) அத்துடன் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து எண்பது ஆயிரத்து முந்நூற்று எழுபத்தாறு ரூபா எழுபத்தேழு சதங்களில் (ரூபா 2,93,80,376.77) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்தில் 24.04.2018 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;

2. மேற்குறிப்பிட்ட ஈட்டுமுறி இல. 299 இன் பேரில் தவணைக்கடன் மீது மூன்று கோடியே பதினாறு இலட்சத்து ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்து நான்கு ரூபா தொண்ணூற்றைந்து சதங்களும் (ரூபா 3,16,01,974.95) அத்துடன் 24.04.2018 ஆந் திகதி தொடக்கம் மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் ரீ அன்ட் எச் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21 ஆம் பிரிவின் கீழ் இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, பிட்டகோட்டைக் கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### முதலாவது அட்டவணை

மேல்மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே பாணந்துறை தல்பிட்டி தெபத்தயில் பாணந்துறை கிராம அலுவலர் பிரிவிலும் திப்பத்த பிரதேச செயலாளர் பிரிவில் பாணந்துறை பிரதேச சபை (வத்துவ உப அலுவலகம்) எல்லைகளுள் திப்பெந்த கிராமத்தில் அமைந்த பஞ்ஞானந்த மாவத்தை வரிமதிப்பு இல. 138/45 ஐக் கொண்ட "கஹட்டகஹவத்த போடாபொன்னவத்த கெட்ட-உட-தெனிய ஓவிட்ட மற்றும் கஜுகஹவத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. ஹெட்டிகே தயாரித்த 15 மே 1993 ஆந் திகதியிட்ட அளவை வரைபட இல. 1503 இல் விபரித்த துண்டு 45 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1503 இல் துண்டு 39 உம்; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1503 இல் துண்டு 44 உம் ; தெற்கு : ஏ. எம். என். த சில்வா மற்றும் ஏனையோர் உரிமை கோரும் காணியும் ; மேற்கு : துண்டுகள் 47, 46 மற்றும் 51 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 1503 இன் படி பதினாறு தசம் ஆறு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 16.60பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள்

மற்றும் சகலதும் ஆகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் டீ 12/41 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகத்தினுள் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகரசபை எல்லைகளுள் பிட்டகோட்டை மேற்கு 522/ஏ ஆம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் பிடடகோட்டையில் அமைந்த பாகொட வீதி, வரிமதிப்பு இல. 130/ஏ ஐக் கொண்டதும் "கல்அம்பலமலங்கவத்த (உறுதியின் பிரகாரம் கல்அம்பலன்வத்த) அல்லது ரேமன்ட் வத்த" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வா தயாரித்த 05 மாச்சு 2014 திகதியிட்ட அளவை வரைபட இல. 5439 இல் விபரித்த துண்டு1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கில்: பாகொட வீதியும்; கிழக்கு : எச். எஸ். தி சில்வா உரிமைகோரும் காணியும்; தெற்கு : வரைபட இல. 9919ல் துண்டு பி49 உம்; மேற்கில் : வரைபட இல. 9919 இல் துண்டு பி2ஏ எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 5439 இன் படி பதினான்கு தசம் நான்கு ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. பே14.46) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட துண்டு 1 கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

மேல்மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பல்லேபற்றுவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகப் பிரிவில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மாநகரசபை எல்லைகளுள் பிட்டகோட்டை மேற்கு கிராம அலுவலர் பிரிவு இல. 522/A இல் பிட்டகோட்டையில் அமைந்ததும் "கல்அம்பலமலங்கவத்த அல்லது ரேமன்ட் வத்த (உறுதியின் பிரகாரம் கல்அம்பலன்வத்த அல்லது ரேமன்வத்த)" என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். பி. தி சில்வா தயாரித்த 04 ஒற்றோபர் 1958 ஆந் திகதியிட்ட வரைபட இல. 9919 இல் விபரித்த துண்டு பி 26 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு : பாகொட வீதியும்; கிழக்கு: ஏ. சேனாநாயக்க உரிமைகோரும் காணியும்; தெற்கு : வரைபட இல. 9919 இல் துண்டு பி4ஏ உம், (உறுதியின் பிரகாரம் துண்டு பி) ; மேற்கு : வரைபட இல. 9919ல் துண்டு பி2ஏ உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபட இல. 9199 இன் படி பதினான்கு தசம் நான்கு ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.46பே.) விஸ்தீரணமுடையது. இது தெல்கந்த, நுகேகொட காணிப்பதிவகத்தில் ஏ 371/94 இல் பதிவுசெய்யப்பட்டது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி,

(திருமதி) எச். ரத்நாயக்க,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பிட்டகோட்டை கிளை.

8 - 266

**சம்பத் வங்கி பீ. எல்.சீ.**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

டபிள்யூ ஜீ சீ எஸ் ராஜபக்ஷ
கணக்கு இல. 0025 5002 8630

2018.04.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசுவான ஏ. டபிள்யூ. எஸ். கல்ஹாரி என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015, மாச்சு 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 755 மற்றும் 2016, யூன் 07ஆந் திகதியிடப்பட்ட இல. 1666 எனும் இரு ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சேர்த்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கடமைப்பட்டுள்ளார் எனும் வகையில் கடன் பட்ட வத்தெகெதர சானக்க சந்தனுவன் ராஜபக்ஷ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இலக்கங்கள். 755 மற்றும் 1666 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் தொண்ணூற்றி ஒன்பது இலட்சத்து எழுபதினாயிரத்து எண்ணூற்று முப்பத்தி நான்கு ரூபா பன்னிரெண்டு சதம் (ரூபா 99,70,834.12) 2018, ஏப்பிறல் 05ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப் படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட தொண்ணூற்றி ஒன்பது இலட்சத்து எழுபதினாயிரத்து எண்ணூற்று முப்பத்தி நான்கு ரூபா பன்னிரெண்டு சதம் (ரூபா 99,70,834.12) 2018, ஏப்பிறல் 06 ஆந் திகதி முதல் இலக்கங்கள். 755 மற்றும் 1666 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபது இலட்சம் ரூபா (ரூபா 20,00,00பே.) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) மேலும் நாற்பது இலட்சத்து இருபத்தி நான்காயிரத்து நானூற்று அறுபத்தி நான்கு ரூபா ஒன்பது சதம் (ரூபா 40,24,464.09)இத்துடன்மேலதிகவட்டியாகஆண்டொன்றிற்கு பதின் மூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள். 755 மற்றும் 1666 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சேர்த்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற

ஏலதாரர்களான ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் சிங்ஹல நகரய - E 352 A கிராம அலுவலர் பிரிவின் மல்வத்த வீதியில், மல்வத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 72/24 A ஐ ஏற்ற "மல்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டீ தஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, மாச்சு 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 2511 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 02 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : கரலியத்த என்பவரின் காணி; கிழக்கு : சுமித் என்பவரின் காணி; தெற்கு : வீடுகள் முதல் மல்வத்த வீதி வரையான வீதி ; மற்றும் மேற்கு : லொட் 1, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்னான்கு பேர்ச். (0ஏ. 0றூ. 14பே.) 0.0354 ஹெக்டேயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன் கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2511 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 183/137 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 02 அண்மைய நில அளவீட்டிற்கமைவாக விபரிக்கப்பட்டுள்ளது:

கூறப்பட்ட மல்வத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 72/24 A ஐ ஏற்ற "மல்வத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜீ. போகாஹாபிட்டிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 2012, ஓகத்து 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 3871 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 01 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : ஜே. டபிள்யு. அலுவிஹாரே மற்றும் ஏ. டீ. சீ. பண்டார என்பவர்கள் உரிமம் கோரும் காணி; கிழக்கு : ஃபாத்திமா சுல்த்தானா என்பவர் உரிமம் கோரும் கோரும் காணி; தெற்கு : மல்வத்த வீதி ; மற்றும் மேற்கு : ஜே. டபிள்யு. அலுவிஹாரே மற்றும் ஏ. டீ. சீ. பண்டார என்பவர்கள் உரிமம் கோரும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ டீ தஸநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2511 எனும் வரைபடத்தில் லொட் 1 என் குறிப்பிடப்பட்ட இக் காணியின் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதின்னான்கு பேர்ச். (0ஏ. 0றூ. 14பே.) அல்லது 0.0354 ஹெக்டெயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 3871 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-187/1

---

**சம்பத் வங்கி பீ. எல்.சீ.**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

2011 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

வை. ஐ. ரீ. டி சில்வா எனும் வை. ரீ. சில்வா
கணக்கு இல. 0113 5000 3373

2018.05.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

"PQ144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட கொழும்பு - 2, சார் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல. 110 இல் அமைந்த சம்பத் வங்கி பீஎல்சீ ஹோல்டிங் சார்பாக இல. 00060023040/ கம்பஹா எனும் உரித்துச் சான்றிதழின் பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. ஜீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஓகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு கட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகள் மீது பெற்றுக் கொண்ட கடனை, கடமைப்பட்டவர்கள் என்ற வகையில் கடன்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் யத்தெஹிகே டென்சன் டி சில்வா எனும் யத்தெஹிகே டென்சன் சில்வா என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 00060023040/ கம்பஹா எனும் உரித்துச் சான்றிதழின் பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. ஜீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஓகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாக செல்லுபடியாகும் ரூபாயில் ஒரு கோடியே பத்து இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்றி நான்கு ரூபா எழுபத்தி ஒரு சதம் (ரூபா 1,10,34,294.71) 2018, மே 03 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்கு செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஒரு கோடியே பத்து இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று தொண்ணூற்றி நான்கு ரூபா எழுபத்தி ஒரு சதம் (ரூபா 1,10,34,294.71) 2018, மே 04 ஆந் திகதி முதல் இல. 00060023040/ கம்பஹா எனும் உரித்துச் சான்றிதழின் பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. ஜீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஓகத்து 26 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 75,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும்

கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இல. 00060023040/கம்பஹா எனும் உரித்துச் சான்றிதழின் பதுளை பிரசித்த நொத்தாரிசுவான கே. ஏ. ஜீ. காஹாந்தவ என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016, ஓகத்து 26ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சேர்த்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் அறவீட்டு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மாஹர பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் மஹர பிரதேச சபை எல்லைகளுக்குள் சூரியபாளுவ வடக்கு கிராம அலுவலர் பிரிவின் சூரியபாளுவ கிரமத்தில் அமைந்த நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கெடெஸ்த்தர் வரைபட இல. 510810 (கட்டம் இல. 1) இல் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 48 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: தியான நிலைய வீதி; கிழக்கு : லொட் 43; தெற்கு : லொட் 47; மற்றும் மேற்கு : லொட் 49, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் சைபர் தசம் சைபர் ஐந்து ஆறு மூன்று ஹெக்டேயர்கள் (0.0563) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், திலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட கெடெஸ்த்தர் வரைபட இல. 510810 இற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M 204/105 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

8-187/2

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ - கண்டி கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் ( விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனம்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையினால். 2018, மாச்சு 28 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

"கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனம் கடப்பாடு உடையதாகவும் பட்டகல்லேகெதர வசந்த காமினி விஜயநாயக்க ராஜபக்ஷ அடகு வைத்தவராகவும், ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ சார்பில், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எச். பி. ரணவலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.06.26 ஆந் திகதியிடப்பட்ட 691 ஆம் இலக்க முறி, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். உடுவெலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.02.21 ஆந் திகதியிடப்பட்ட 4622 ஆம் இலக்க முறி, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. ரி. யஹத்துகொடவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2013.09.11 ஆந் திகதியிடப்பட்ட 187 ஆம் இலக்க முறி, கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. ரி. யஹத்துகொடவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.03.06 ஆந் திகதியிடப்பட்ட 294 ஆம் இலக்க முறி மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.06.14 ஆந் திகதியிடப்பட்ட 4612 ஆம் இலக்க முறி என்பன குறிப்பிட்ட அட்டவணையில் அடகு ஆதனம் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைய ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்தினால் கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட கடனை மீள பெறுவதற்கான பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

அத்துடன், முன்சொல்லப்பட்ட பட்டகல்லேகெதர வசந்த காமினி விஜயநாயக்க ராஜபக்ஷ முன்சொல்லப்பட்ட கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவத்தின் காரியாம்சமான உரிமையாளர் என்பதுடன் சொல்லப்பட்ட நிறுவனத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர் என்பதுடன், கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தின் கிட்டத்தட்ட எல்லா பங்குகளையும் கொண்டுள்ளதுடன், நிறுவனத்தின் இயக்குனர் ஒருவராக உள்ளதுடன், கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தை கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதுடன், சொல்லப்பட்ட நிறுவனத்தை அதற்கு ஏற்ற முறையில் நிர்வகிப்பவர் என்பதன் மூலம் முன்சொல்லப்பட்ட பட்டகல்லேகெதர வசந்த காமினி விஜயநாயக்க ராஜபக்ஷ, கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்திற்கு ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்தினால் வழங்கப்பட்ட நிதியின் மூலம் உண்மையிலேயே பயனடைபவர்.

அத்துடன், கேற்ற பிளான் புட் (பிரைவேட்) லிமிட்டட் நிறுவனம் மற்றும் பட்டகல்லேகெதர வசந்த காமினி விஜயநாயக்க ராஜபக்ஷ, ஆகியோர் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2017, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒரு கோடியே ஒரு இலட்சத்து ஆயிரத்து முந்நூற்று நாற்பத்து மூன்று ரூபா, எழுபத்து ஐந்து சதம் (ரூபா 1,01,01,343.75) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க

வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் சொல்லப்பட்ட 691, 4622, 187, 294 மற்றும் 4612 இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு ஈட்டு வைக்கப்பட்டனவுமான ஆதனம் சொல்லப்பட்ட ரூபா 1,01,01,343.75 பணத்தொகையை 2017, நவெம்பர் 1ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை மேலும் வட்டியுடனும், விளம்பர செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் உள்ள யட்டிநுவரவின் மெதபலாத்தவில் உள்ள யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் பிரதேச சபை மற்றும் சியம்பலாகொட கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட சியம்பலகொடவில் உள்ள ''தம்பலந்த ஹேன'' என அழைக்கப்படும் காணியின் பகுதி, உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். எம். அசோக்கா விஜயகோனினால் தயாரிக்கப்பட்ட 2006.03.20 ஆந் திகதியிடப்பட்ட 1753 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : காணித்துண்டு 1 ; கிழக்கு : தன்துர - பிலிமத்தலாவ பெருந் தெரு ; தெற்கு : 9 அடி அகலமான வீதி ; மேற்கு : காணித்துண்டு 3 என அடையாளம் இடப்பட்ட 4 அடி அகலமான வீதி, எட்டு தசம் ஆறு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 8.60பே.) விஸ்தீரணத்தைக் கொண்டதுடனான மரங்கள். பயிர் செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

2. மத்திய மாகாணம், கண்டி மாட்டத்தில் உள்ள யட்டிநுவரவின் மெதபலாத்தவில் உள்ள யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் பிரதேச சபை மற்றும் சியம்பலாகொட கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட சியம்பலகொடவில் உள்ள ''தம்பலந்த ஹேன'' என அழைக்கப்படும் காணியின் பகுதி, உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். எம் அசோக்கா விஜயகோனினால் தயாரிக்கப்பட்ட 2006.03.20 ஆந் திகதியிடப்பட்ட 1753 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. ஆர். ஜயதிலகவிற்கு சொந்தமான தம்பலந்த ஹேன ; கிழக்கு : தன்துரவில் இருந்து பிலிமத்தலாவ செல்லும் பெருந்தெரு ; தெற்கு : காணித்துண்டு 2 ; மேற்கு : காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்ட 4 அடி அகலமான வீதி, பதின் மூன்று பேர்ச் (0ஏ. 0றூ. 13பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

முன் சொல்லப்பட்ட காணித்துண்டு 1 அண்மையில் நில அளவை செய்யப்பட்டதுடன், உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எம். எம். அசோக்கவினால் தயாரிக்கப்பட்ட 2006.03.20 ஆந் திகதியிடப்பட்ட 1753 ஆம் இலக்க வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளதன் விபரங்கள் பின்வருமாறு:

முன்சொல்லப்பட்ட கண்டி மாவட்டத்தில் உள்ள யட்டிநுவரவின் மெத பலாத்தவில் உள்ள யட்டிநுவர பிரதேச செயலாளர் பிரிவு, மற்றும் பிரதேச சபை மற்றும் சியம்பலாகொட கிராம அலுவலர் பிரிவிற்கு உட்பட்ட சியம்பலகொடவில் உள்ள ''தம்பலந்த ஹேன'' என அழைக்கப்படும் காணியின் பகுதி, உரிமம் பெற்ற நில அளவையாளர் கே.பி. லன்சகாரநாயக்காவினால் தயாரிக்கப்பட்ட 2007.05.07 ஆந் திகதியிடப்பட்ட 6026 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள்- வடக்கு : டபிள்யூ. ஆர். ஜயதிலகவின் தம்பலந்த ஹேன ; கிழக்கு: தன்துரவில் இருந்து பிலிமத்தலாவ செல்லும் பெருந்தெரு தெற்கு : வரைபட இலக்கம் 1723 இல் உள்ள காணித்துண்டு 2; மேற்கு : காணித்துண்டு 2 என அடையாளம் இடப்பட்ட 4 அடி வீதி, பன்னிரண்டு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 12.9பே.) விஸ்தீரணத்துடனான மரங்கள், பயிர் செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

சபையின் கட்டளைப்படி,

கே.ஏ.எல்.ரி. ரணவீர,
பி.பொ.மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

8-188

---

### மக்கள் வங்கி- மெஜஸ்ட்டிக் சிட்டி கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையின் 2017.10.26 ஆந் திகதி நடைபெற்ற அவர்களின் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

''2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் முறையாகக கூட்டிணைக்கப்பட்டதும் பீவீ 60980 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொழும்பு 04, மஜஸ்ட்டிக் சிட்டி, 3 ஆம் மாடி, 03-23 ஆம் இலக்கத்தில் கொண்டுள்ளதுமான செல்சீ இம்போர்ட் அன்ட் எக்ஸ்போர்ட் (பிறைவேட்) லிமிடெட், மக்கள் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. லியனகே என்பவரால்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2016.11.28 ஆந் திகதிய 7290 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளதாதலால், சொல்லப் பட்ட 7290 ஆம் இலக்க முறிமீது ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து இருபத்திமூவாயிரத்து முந்நூற்றியைம்பத்தொரு ரூபா இருபத்தெட்டுச் சதம் (ரூ. 1,09,23,351.28) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. 2017.08.23 ஆந் திகதியிலிருந்து பதினெட்டு இலட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபா (ரூபா 18,28,000.0பே.) கொண்ட தொகையை ஆண்டொன்றுக்கு 16% வட்டியுடனும் மூன்று இலட்சத்து அறுபத்திமூன்றாயிரத்து இருநூற்றியெண்பத்திமூன்று ரூபா முப்பத்திரெண்டு சதம் (ரூபா 3,63,283.32) கொண்ட தொகையை 2017.08.23 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 16% வட்டியுடனும் அத்துடன் எழுபத்தொன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூபா 79,50,000.0பே.) கொண்ட தொகையை 2017.08.23 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 16% வட்டியுடனும் செலவுதொகைகளையும் வேறு விற்பனை இறுப்பனவகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் (எவையேனும்) பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காகச் சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஏர்வின் பெரேரா அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை, 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தினால் அவர்களுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது.''

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விபரணம்

மேல் மகாகணம், கொழும்பு மாவட்டத்தின் ஹேவாகம் கோறளையின் அதிகாரி பத்துவில் கொடக்காவத்த - முல்லேரியாவ பிரதேச சபை எல்லைகளினுள்ளும் முல்லேரியாவ கிராம அலுவலர் பிரிவினுள்ளும் கொலன்னாவ பிரதேச செயலக பிரிவினுள்ளும் முல்லேரியாவில் அமைந்துள்ளதும் "கலவலகொடவத்த, கொஸ்கஹாவத்த மறுபெயர் கலவலபொடவத்த மறுபெயர் துண்ஹவுல்கல்வளுவத்த'' எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் டீ. ரீ. ஏ. திசாநாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.08.07 ஆந் திகதிய 2051 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 2 எனவடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது. வடக்கு : காணித்துண்டம் ; கிழக்கு : காணித்துண்டம் 3 ; தெற்கு : 217 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 இன் பாகம் ; மற்றும் மேற்கு: ஏ. எச். பீ. திசாநாயக்க, டபிள்யூ. எம். சுமணவதி மற்றும் ஏனையோரின் காணி; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 2051 ஆம் இலக்க வரைபடத்தின்படியும் அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பதின்மூன்று தசம் ஏழு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 13.7பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட முல்லேரியாவில் அமைந்துள்ளதும் "கலவலகொடவத்த, கொஸ்கஹாவத்த மறுபெயர் கலவலபொடவத்த மறுபெயர் துண்ஹவுல்கல்வளுவத்த'' எனவழைக்கப்படும் ஒன்று சேர்க்கப்பட்ட காணிகளின் வரையறுக்கப்பட்ட பாகமாகவுள்ளதும் 217 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும் காணித்துண்டம் 7 எனவடையாளமிடப்பட்டதும் (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலிலும் அதன்மீதும் வண்டிவீதிக்கான எல்லா உரிமையும் சொல்லப்பட்ட வண்டிவீதியின் ஏனைய பயன்படுத்துவோருடன் பொதுவாக மின்சாரக்குழாய்கள் மற்றும் நீர்க்குழாய்களை இடுவதற்கான உரிமையும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 7 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கு : காணித்துண்டங்கள்1, 11 மற்றும் 12 ; கிழக்கு : காணித்துண்டங்கள் 8, 9, 10, 11, 12, 14, 15 மற்றும் 18; தெற்கு : ஜே. திசாநாயக்க மற்றும் ஏ. பி. ஹென்ரிகின் மரபுரிமையாளர்களின் ஆதனங்கள் மற்றும் காணித்துண்டம் 13 அத்துடன் வீதி ; மற்றும் மேற்கு : காணித்துண்டங்கள் 2, 3, 4, 5, 6, 13, 16, 17; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 217 ஆம் இலக்க வரைபடத்தினன்படி முப்பத்தைந்து தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 35.5பே.) கொண்டுள்ளது.

மேற்கூறப்பட்ட முல்லேரியாவில் அமைந்துள்ளதும் "கலவலகொடவத்த, கொஸ்கஹாவத்த மறுபெயர் கலவலபொடவத்த மறுபெயர் துண்ஹவுல்கல்வளுவத்த'' எனவழைக்கப்படும் காணியினதாய் சொல்லப்பட்ட 2051 ஆம் இலக்க வரைபடத்திற் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 3 எனவடையாளமிடப்பட்டதும் (10 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கிடம்) பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், சொல்லப்பட்ட காணித்துண்டம் 3 பின்வரும் எல்லைகளையுடையது: வடக்கில் காணித்துண்டம்1; கிழக்கு : 2017 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 மற்றும் வீதி (217 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 7); தெற்கு : 217 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 2 இன் பாகம் ; மற்றும் மேற்கு : காணித்துண்டம் 2 உம் ஏனையவையும்; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட 2051 ஆம் இலக்க வரைபடத்தின்ப இரண்டு தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ.பே2.5) கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிராந்திய முகாமையாளர்,
(கொழும்பு தெற்கு)

மக்கள் வங்கி
வலய தலைமை அலுவலகம் - (மேற்கு வலயம் - 01)
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

8 - 246

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்கச் சட்டத்தினால் 1974 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*2017.06.29 ஆந் திகதியன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது:-*

"*1. காலி பிரசித்த நொத்தாரிசு திருமதி என். பீ. ஜீ. சந்திரிகா அத்தாட்சிப்படுத்திய 2014.09.26 ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 3408 இன் பேரில் புஹுல்வெல்ல, கிரிந்த, ஈஸ்டர்ன் பாமஸிறிகல்ஸின் ஏக உரிமையாளர் திரு. பந்துல விக்ரமரத்ன செனெவிரத்ன என்பவரிடமிருந்து 2017.05.19 வரை முதலும் வட்டியும் ஒரு கோடியே எண்பத்துமூன்று இலட்சத்து நாற்பத்தாறு ஆயிரத்து அறுநூற்றுப் பதினைந்து ரூபா தொண்ணூற்றொன்பது சதங்களும் (ரூபா 1,83,46,615.99) அத்துடன் ஒரு கோடியே நாற்பது இலட்சம் ரூபாவில் (ரூபா 1,40,00,000.0பே.) ஆண்டுக்கு பதினேழு (17%) வீதத்தில் 2017.05.20 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்;*

*2. பிரசித்த நொத்தாரிசு திருமதி என். பீ. ஜீ. சந்திரிகா அத்தாட்சிப்படுத்திய 2014.09.26 ஆந் திகதியிட்ட மேற் குறிப்பிட்ட முறி இல. 3408 இன் பேரில் வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஒரு கோடியே எண்பத்துமூன்று இலட்சத்து நாற்பத்தாறு ஆயிரத்து அறுநூற்றுப் பதினைந்து ரூபா தொண்ணூற்றொன்பது சதங்களும் (ரூபா 1,83,46,615.99) அத்துடன் 2017.05.20 ஆந் திகதி தொடக்கம் விற்பனை திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) ஆம் அதன் திருத்தங்களுக்கமைய இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த் திருவாளர்கள் T அன்ட் H ஏல நிறுவனத்தின் ஏலதாரருக்கும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி, மாத்தறை நகரக்கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.*"

### அட்டவணை

*தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், கங்கபடபற்று கிரிந்த புஹுல்வெல பிரதேசச் செயலகம் மற்றும் பிரதேசசபை எல்லைகளுள் கிரிந்த மகின் இஹல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கிரிந்தயில் அமைந்த உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எம். விதானகமாச்சி தயாரித்த 2008, சனவரி 31 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1544 இன்படி கிரிந்தயில் அமைந்த உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். விதானகமாச்சி தயாரித்த 2008, சனவரி 31 ஆந் திகதியிட்ட வரைபட இல. 1544 இன் படி கிரிந்தயில் அமைந்த "நெதொல்பிட்டிய ராலகேவத்தயின்" துண்டு 1 என அடையாளமிட்ட காணித்துண்டு - வடக்கு: மாத்தறையிலிருந்து ஹக்மன வரை பெருந்தெருவும்; கிழக்கு: மில்லகஹ கனத்தயும் கெந்தகெட்டியவத்தயும்; தெற்கு : பாதையும்; மேற்கு : உத்தரவு பெற்ற நில அளவையாளர் டபிள்யு. என். ஜாகொட தயாரித்த 1970.11.11 ஆந் திகதியிட்ட வரைபட இல. 825ல் துண்டு இலக்கங்கள் 1, 2, 3, 4, மற்றும் 5 உம் எல்லைகளாகக் கொண்டு இரண்டு றுட் முப்பத்தேழு தசம் சைபர் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 2றூ. 37.02பே.) விஸ்தீரணமுடைய காணியும் ஆகும். இது மாத்தறை காணிப்பதிவகத்தில் K 12/31 இல் பதிவுசெய்யப்பட்டது.*

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

எஸ். எஸ். ரூபசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மாத்தறை நகரம்.

*8-271*

---

## நெஷனல் டெவலப்மண்ட் பேங்க் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

*2018, யூன் 19 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கீழே காட்டப்பட்டவாறு நெஷனல் டெவலப்மண்ட் பேங்க் பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.*

